# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

தீபம் - 69 ஐப்பசி Email : theepamlink@gmail.com TP: 026 2221022 / 026 2054362 Rs. 30/=




## "வாழ்வு சார்ந்த வழிபாடு"

மாதாந்தத் தொடர்

அருட்பணி. அலெக்சாண்டர் மரியதாஸ்

கோவை மறைமாவட்டம்
தென்னிந்தியா.

12



இம்மாத சிறப்புக் கட்டுரை 08

## "மறைபரப்பும், நவீன தொடர்புசாதனங்களும்"

அருட்பணி.
ரூபன் மரியாம்பிள்ளை

யாழ்ப்பாண மறைமாவட்டம்.

## திருகோணமலை, ஆண்டாங்குளத்தில் அன்னை வேளாங்கண்ணிக்கு ஓர் புதிய ஆலயம்



அருட்பணி தியோபிலஸ் றாகல் அடிகள் பாலையூற்றுப் பங்கின் பங்குத் தந்தையாக பொறுப்பேற்ற பின் அப்பங்கின் கீழ் காணப்பட்ட ஆண்டாங்குளத்தில் 1972ல் புனித செபஸ்தியாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஓர் சிற்றாலயம் அமைக்கப்பட்டு 1973 - 01 - 28ல் அவ்வாலயத்தின் முதலாவது திருவிழாவும் கொண்டாடப்பட்டது. ஆயினும் ஆலயம் அமைக்கப்பட்ட நிலத்தின் உரிமை தொடர்பான பிரச்சனை எழுந்ததால் அவ்விடம் உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டு ஆண்டாங்குளப் பகுதிக்கான புதிய ஆலயம் அமைப்பதற்கான புதிய நிலப்பகுதி தேடிக்கொள்ளப்பட்டது. அவ்விடத்தில் ஓர் சிற்றாலயம் அமைக்கப்பட்டு அப்போது திருகோணமலை மறைமாவட்டத்தின் புதிய ஆயராக நியமனம் பெற்றுவந்த பேரருட்திரு. L. R. அன்ரனி ஆண்டகையினால் இந்தியாவிலிருந்து வருவிக்கபட்ட அன்னை வேளாங்கண்ணியின் திருச்சுரூபம் அவ்வாலயத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. ஆயர் பேரருட்திரு. L. R. அன்ரனி ஆண்டகையினால் திருகோணமலையில் அபிஷேகம் செய்யப்பட்ட முதல் ஆலயமும் இதுவாகும். தமிழ் மொழியில் மாத்திரம் ஒப்புக்கொடுக்கபட்ட திருப்பலி ஆராதனைகள் 1982 முதல் தமிழ் - சிங்கள மொழிகளில் ஒப்புக்கொடுக்கபடலாயிற்று. அருட்பணி. இருதயநாதன் அ.ம.தி, அருட்பணி. கிறிஸ்டி கனகநாதன் அ.ம.தி, அருட்பணி. மார்செலியார் அ.ம.தி. ஆகியோர் பாலையூற்றுப் பங்குத்தந்தையராக இவ்வாலயப் பணிகளையும் முன்னெடுத்தவராவர். அருட்பணி. ஜோர்ஜ் திசாநாயக்க அடிகளார் இவ்வாலயத்தினை சிறப்புப் பணித்தளமாக பெற்றதிலிருந்து 1996 முதல் 2018 வரை சில இடைக்கால இடைவெளிகளோடு இவ்வாலயம் திருகோணமலையின் குவாடலூப்பே, பேராயலம், சீனங்குடா ஆகிய பங்குகளின் நிர்வாகத்தின் கீழ் காலத்திற்கு காலம் மாற்றம் பெற்று வளரலாயிற்று.

இறுதியாக 2018ம் ஆண்டு ஆண்டாங்குளம் தனிப் பங்காகப் பிரகடனப்படுத்தப்பட்டு அருட்பணி. டன்ஸ்டன் ப்ரெட்றிக் அடிகளார் முதலாவது பங்குத்தந்தையாகப் பொறுப்பேற்றுக்கொண்டார். அடிகளாரின் அயராத முயற்சியினால் தற்போது புதிய ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டு கடந்த 08.09.2020 செவ்வாய்கிழமை திருகோணமலை ஆயர் பேரருட்திரு. கி. நோயல் இம்மானுவேல் ஆண்டகையினால் அபிஷேகம் செய்து திறந்துவைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயத்திற்கான ஆன்மீக, சரீர, பொருளாதார உதவிகள் செய்த அனைத்து உபகாரிகளையும் பங்குமக்களோடு சேர்ந்து நாமும் திருகோணமலை மறைமாவட்ட சமூகமாக நன்றிகூறி வாழ்த்துகின்றோம்.

## ஒக்டோபர் - 07
## திருச்செபமாலை அன்னையின் திருவிழா



**இம்மாதம் முழுவதும்**
**இல்லங்களில் செபமாலை ஓதுவோம் !**
**குடும்பங்களில் ஆசிரைப் பெறுவோம் !**



## ஒக்டோபர் - 18
## மறைபரப்பு உலகநாள்

இம்மாத திருமலைத் தீபம்
மறைபரப்பு / நற்செய்தி மீளறிவிப்பு
சிறப்பிதழாய் உங்கள் இல்லம் வருகிறது.

## மறைமாவட்ட அறிவித்தல் பலகை



- Fr. ஜூட் ஜோன்சன் அடிகள் 15. 09. 2020 முதல் கண்டி தேசிய குருமடத்தில் குருமாணவர்களை பயிற்றுவிக்கும் பணியில் அங்குள்ள அருட்பணியாளர் குழுமத்தோடு இணைகிறார்.



- Fr. சுகுனேந்திரன் குரூஸ் அடிகள் 14. 09. 2020 முதல் புனித வின்சன்ட் டி பவுல் சபையின் திருகோணமலை மறைமாவட்ட ஆன்மீக இயக்குனராக தனது பணிகளை ஆரம்பிக்கிறார்.



- Fr. அன்ரன் சில்வெஸ்டர் அமதி அடிகள் 14.09.2020 முதல் திருகோணமலை - இருதயபுரம், திருஇருதய ஆண்டவர் ஆலய பங்கின் பங்குத் தந்தையாக பணியேற்கிறார்.

## மறைக்கல்வி நிலைய அறிவித்தல்கள்

- **24.10.2020** மறையாசிரியர்களுடனான சந்திப்பும், பயிலுனர் மறையாசிரியர் களுக்கான பயிற்சிக் கருத்தரங்கும் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.
- **07.11.2020** மறைமாவட்ட ரீதியான திருவிவிலிய வினாவிடை, கட்டுரைப் போட்டிகள் இடம்பெறவுள்ளது.
- **21.11.2020** தேசிய மறையாசிரியர் தேர்வுப் பரீட்சைகள் (1,2,3) நடைபெறவுள்ளது.
- **28.11.2020** தேசிய ரீதியான திருவிவிலிய வினாவிடை, கட்டுரைப் போட்டிகள் இடம்பெறவுள்ளது.
- **அலுவலக நேர மாற்றம்** - மறைக்கல்வி நிலைய செயற்பாடுகள் வாரநாட்களுக்கு (திங்கள்-வெள்ளி) மட்டுப்படுத்தப்பட்டுள்ளது: காலை 9.00 - மாலை 4.00 வரை. சனிக்கிழமைகளில் விசேட ஒன்றுகூடல்கள் மு.ப 8:30-பி.ப12:00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இம்மாத மேற்கோள்கள் நீதிமொழிகள் நூலிலிருந்து...

# புனித காவல் தூதர்கள்

நீர் செல்லும் இடமெல்லாம் உம்மைக் காக்கும்படி, தம் தூதர்க்கு அவர் கட்டளையிடுவார். திபா: 91:11



அருட்பணி. சுரேன் அமதி

ஐப்பசி 2ம் திகதி திருச்சபை காவல் தூதர்களின் நினைவைக் கொண்டாடுகின்றாள். நவீன கால கிறிஸ்தவர்களால், அதிகம் மறக்கப்பட்டவர்கள் இவர்கள். ஆனால் அதிகம் தேவைப்படுபவர்களும் இவர்களே. சிறிய வயதிலே காவல் தூதர்களைக் குறித்து ஒரு செபம் மனப்பாடம் செய்தது இன்னும் ஞாபகம் இருக்கிறது. "எனக்கு காவலாயிருக்கிற தேவ சம்மனசானவரே,தேவ கிருபையால் உம்மிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள எனக்கு ஞானவெளிச்சம் தந்து பாதுகாத்தருளும், ஆமென்". இந்த செபம் எனது மனதிலே ஓர் அழியாத பொக்கிஷமாக இருப்பது மட்டுமன்றி கடவுளின் பராமரிப்பை அளப்பரிய முறையில் உணரவும் செய்கின்றது. இதற்கு பல புனிதர்களின் வாழ்க்கை வரலாறும் சான்றுபகர்கின்றது. கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி வானதூதர்களை: "முற்றிலும் ஆவி இயல்புடைய படைப்புக்கள். பருப்பொருள் சாராமை, ஆள்தன்மை இல்லாமை, இழிவில்லாமை, கண்ணுக்கு புலப்படாமை எனும் தன்மைகளையும் அறிவையும், விருப்புரிமையையும் கொண்டவர்கள். இவர்கள் கடவுளை இடைவிடாமல் நேருக்கு நேர் கண்டு மாட்சிப்படுத்துகின்றார்கள். மானிடரை மீட்கும் பணியை நிறைவு செய்யும் தூதர்களாக அவருக்கு பணிபுரிகின்றார்கள், என்று வரைவிலக்கணப்படுத்துகின்றது (இல:60).

திருவிவிலியத்தில் இவர்களைப் பற்றி பல எடுத்துக்காட்டுக்கள் உள்ளன. 2 அரசர் நூலில் 6:17 குறிப்பின்படி - எலிசா, "ஆண்டவரே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும்!" என்று வேண்டினார். ஆண்டவர் அவ்விதமே வேலைக்காரனின் கண்களைத் திறந்தார். இதோ! மலை எங்கணும் நெருப்புக் குதிரைகளும், தேர்களும் எலிசாவைச் சூழ்ந்து நிற்பதைக் கண்டான், நீதித்தலைவர்கள் நூல் 13:6,8ல் இறைவனின் தூதர் யார்? அவர் தோற்றம் என்ன? அவர் பணி என்ன? என்பதை விளக்குகிறது. எபிரேயர் 1:14 "அவர்கள் அனைவரும் ஊழியம் புரியும் ஆவிகள் அல்லவா? மீட்பை உரிமைப்பேறாகப் பெறவிருப்போருக்குத் தொண்டாற்ற அனுப்பப்பட்டவர்கள் அல்லவா?" என்று தூதர்களைப் பற்றிப் பேசுகிறது. மத்தேயு நற்செய்தியில் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து "இச்சிறியோருள் ஒருவரையும் நீங்கள் இழிவாகக் கருதவேண்டாம் கவனமாயிருங்கள்! இவர்களுடைய வானதூதர்கள் என் விண்ணகத் தந்தையின் திருமுன் எப்பொழுதும் இருக்கின்றார்கள் என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்". என்றுரைக்கிறார்.

புனித ஜெரோம் காவல் தூதர்களைப் பற்றி கூறுகையில், "ஆன்மாவின் மாண்பு எத்துணை உயர்வானது ஏனெனில் ஒவ்வொருவருக்கும் பிறப்பிலிருந்து தங்களைக் காக்க தூதர்களுக்கு கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது". என்கிறார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், காவல் தூதர்கள் எமது பயணத் தோழர்கள். நான் காலையில் எழுந்ததிலிருந்து அவரை அடையாளப்படுத்திக் கொள்கின்றேனா? காலை வணக்கம் சொல்கின்றேனா? நான் அவருக்கு செவிமடுக்கின்றேனா? இரவு நேரத்தில் என்னைக் காவல் செய்யும்படி கேட்டுக்கொள்கின்றேனா?, என்று அன்றாட வாழ்வில் அவர்களின் பங்களிப்பினையும் தேவையினையும் விளக்குகின்றார். (France-Presse, Agence. The Guardian, October 2, 2014). ஆனால் திருச்சபை பணியாளர்களோ அல்லது அவர்கள் மறையுரையோ இந்த காவல் தூதர்களைப் பற்றி அதிகம் பேசுவதில்லை.

இவர்கள் நிச்சயமாக :

1. எப்பொழுதும் எங்களை சுற்றி இருப்பவர்களே (திபா: 34:7)
2. ஆண்டவரோடு இருந்து அவரது பெயரை அறிக்கையிடுபவர்கள். இயேசுவை நாம் ஏற்றுக்கொள்ள எம்மைத் தூண்டுபவர்கள்.(லூக் 12:8)
3. இறைவனுக்கு துதிபாடுபவர்கள். (எபி:1:6)
4. மனம்மாறிய பாவியைக் குறித்து அவர்கள் மகிழ்ச்சிகொள்வர். (லூக்:15:10)
5. இவர்கள் தனி நபர் அல்ல இவர்கள் எண்ணற்றவர்கள். (மத்:26:53)
6. பணிவிடை செய்பவர்கள். (லூக்:22:43)
7. இவர்கள் சீர்படுத்துபவர்கள். (மத்:13:39-43)
8. இயேசுவோடு மீண்டும் வருவார்கள் (மாற் 8:38)
9. புனிதர்களின் இறப்பிலும் இவர்கள் சமூகமாயிருக்கின்றனர். (லூக்:16:22)
10. எம்மை அறியாமலே நாம் எமது காவல் தூதர்களை மகிழ்ச்சிப்படுத்தியிருக்கின்றோம். (எபி:13:2)
11. எமது மீட்புப் பணியில் மிக ஆர்வமுடையவர்கள். (1பேது:1:12)

எத்துணை அருமையான தூதர்கள் இவர்கள், எத்துணை அழகான பணிகள் இவைகள். இன்னும் அதிகமான விவிலிய உண்மைகள் இருக்கின்றன. இவை அனைத்தும் எமக்கு கிடைக்கப்பெற்றும் ஏன் நாம் இவர்களை மறக்கின்றோம். விவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த உதாரணங்களை அறிந்துகொள்வது மாத்திரமல்ல மாறாக இவர்கள் எமக்கும் தேவையானவர்கள் மற்றும் எமக்காக இருப்பவர்கள் என்கின்ற விழிப்புணர்வும் எமக்கு அவசியமாகின்றது. இவர்கள் மனிதர்களுக்காக அனுப்பப்பட்டவர்கள் என்று விவிலியம் விளக்குகின்றது. இதை விட இன்னும் ஓர் அழகான உண்மை வழிபாட்டினூடாகக் கொடுக்கப்படுகின்றது.

வழிபாட்டு இறையியலின் அடிப்படையில் உற்று நோக்குகையில், வழிபாட்டு நாட்காட்டியில் ஐப்பசி 2ம் திகதி கொண்டாடப்படும் காவல் தூதர்களின் நாளை "நினைவு" நாளாக திருச்சபை கொண்டாடுகின்றது. ஏனைய "பெருவிழா" அல்லது "விழா" நாட்களைப் போல இந்த நினைவு நாளையும் சிறப்பாகக் கொண்டாட விசேட வாசகங்களும், திருப்பலி நூலிலே மூன்று தலைமை செபங்களும், தொடக்கவுரையும் கொடுக்கப்பட்டுள்ளது. அதேபோல், திருப்புகழ்மாலை செபிப்பவர்களுக்காக அதனது விசேட ஒழுங்கும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த காவல் தூதர்கள் யார் என்கின்ற விளக்கங்களை அன்றைய திருப்பலி செபங்களும் எமக்கு கூறி நிற்கின்றன. திருக்குழும மன்றாட்டிலே, "சொல்லற்கரிய உமது பராமரிப்பினால் எங்களைப் பாதுகாக்க உம் புனித வானதூதர்களை அனுப்பத் திருவுளமானீரே!," என்றும், காணிக்கைமீது மன்றாட்டிலே, "அவர்களுடைய முடிவில்லா அருட்காவலால் நாங்கள் இம்மையின் இடர்களிலிருந்து விடுதலை பெற்று..," என்றும் திருவிருந்துக்கு பின் மன்றாட்டிலே, "வானதூதரின் பணியால், மீட்பும் அமைதியும் தரும் பாதையில் எங்களை வழி நடத்துவீராக" என்றும் தரப்பட்டுள்ளது. ஆகவே, இவர்கள் எமக்கு காவலாளிகளாகவும், எமது மீட்பு பாதையில் துணை நிற்பவர்களாகவும், எமது ஆன்மாவுக்கு தொடர்ந்து பணியாற்றிக்கொண்டே இருக்கின்றனர்.





தொடக்கவுரையிலே, "உம்முடைய முதன்மை வானதூதர்கள், வானதூதர்கள் வழியாக உமது புகழ் குறைவின்றி பறைசாற்றப்படுகின்றது. ஏனெனில் உம் படைப்புக்களாகிய வானதூதர்கள் பெறுகின்ற புகழ் எல்லாம் உமது மாண்பையும் மாட்சியையும் மேம்படுத்த உம்மிடமே வந்து சேருகின்றன. அவர்கள் பல்வேறு அணிகளால் அலங்கரிக்கப்பட்டுச் சிறந்து விளங்குவதால் நீர் அளவு கடந்த மாண்புடையவர் எனவும், அனைத்திற்கும் மேலானவர் எனவும் எங்கள் ஆண்டவர் கிறிஸ்து வழியாகக் காட்டுகின்றீர்". இந்த செபங்கள் அன்றைய வழிபாட்டின் கருப்பொருளை மிகத் தெளிவாகக் காட்டுகின்றன. இதுமட்டுமல்ல ஒவ்வொரு நாள் திருப்பலியின் போதும் பயன்படுத்தப்படுகின்ற தொடக்கவுரையின் முடிவிலே "ஆகவே, வானதூதர், முதன்மை வானதூதரோடும்", என்று கூறி கடவுளின் மாட்சியை புகழ்ந்து பாட இறைமக்களின் சமூகத்தை திருச்சபை அழைப்பது என்பது நாம் விண்ணவரோடு சேர்ந்து பலியை ஒப்புக்கொடுக்கின்றோம் என்றும், நாம் கொண்டாடும் வழிபாடு விண்ணக வழிபாட்டின் முற்சுவை என்றும் அர்த்தம் கொள்ளலாம். "வானதூதர்களோடு சேர்ந்து திருச்சபை கடவுளுக்கு வழிபாடு செலுத்துகின்றது. அவர்களது உதவியை வேண்டுகின்றது. தனது திருவழிபாட்டில் அவர்களில் ஒருசிலரை நினைவுகூர்கின்றது. "நம்பிக்கை கொண்ட ஒவ்வொருவர் அருகிலும் வானதூதர் ஒருவர் பாதுகாவலராகவும், வழித்துணைவராகவும் இருந்து அவரை வாழ்வுக்கு அழைத்துச் செல்கின்றார்", என்கிறார் புனித பெரிய பசில், (கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி,(இல:61).

எமக்கும் ஒரு காவல் தூதர் இருக்கின்றார் என்பது எமது நம்பிக்கை, அது தான் உண்மை. நாம் அவரை கண்டுகொள்வதும் அவரின் உதவி வேண்டி செபிப்பதும் எமது இறை விசுவாசத்தை மேலும் அலங்கரிக்கின்றது. இவரை யார் மறந்தாலும் இவர் எமக்குள் மறைக்கப்பட்டுள்ளார், எமது விசுவாச வாழ்வின் வெளிச்சத்தை எமக்கு மேலும் காண்பித்து இறைவனின் அருளை அதிகமாகப் பெற்றுக்கொள்ள இன்றைய நாளிலே மன்றாடுவோம்.

"குற்றமில்லாதோரின் நேர்மை அவர்களின் வழியை நேராக்கும்" (நீ. மொ- 11:5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய தோற்பைகளில் ஊற்றப்படும் புதிய திராட்சை இரசம் !!!




வாசகர்களுக்கு வணக்கம்!

மறைபரப்பு உலக நாளினை நினைவு கூறும் இம்மாதத்தில் நற்செய்தி அறிவிப்பினை பிரதான கருப்பொருளாகக் கொண்டு இம்மாத தீபத்தினை ஏற்றிவைப்பதில் அளவற்ற மகிழ்ச்சி. எங்கள் மறைமாவட்டத்திலும் இது நற்செய்தி மீள் அறிவிப்பு ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால் மறைபரப்பு, நற்செய்தி அறிவிப்பு குறித்துச் சிந்திக்கலாமே என்று எம் நாட்டிலும் அயலிலும் மறைபரப்புக் குறித்த கட்டுரைகளைப் புரட்டிய போது கண்களில் அதிகம்பட்டது, **புதியமுறை நற்செய்தி அறிவிப்பு** அல்லது **மீள்நற்செய்தி அறிவிப்பு** என்ற தலைப்புக்களே.

ஆர்வத்தோடு அக்கட்டுரைகளைப் படித்த எனக்கு உள்ளத்தில் எதிரொலித்ததென்னமோ இயேசுவின், "பழைய தோற்பைகளில் எவரும் புதிய திராட்சை மதுவை ஊற்றி வைப்பதில்லை. ஊற்றி வைத்தால் மது தோற்பைகளை வெடிக்கச் செய்யும், மதுவும் தோற்பைகளும் பாழாகும்... (மாற்கு 2:22) என்ற வார்த்தைகளே! ஏனென்றால் தலைப்புக்கள் என்னமோ புதிய சிந்தனைகளை, புதிய வழிமுறைகளை மறைபரப்புப் பணியில் புகுத்தப் போவது போல தெரியப்பட்டிருந்தது. சில புதிய முறைமைகளை அறிமுகப்படுத்தவும் செய்கின்றது. பின்னர் அனைத்தையும் அதே பழைய: திருமுழுக்குப் பெறுவோருக்கே மீட்பு என்ற வகையில் "எத்தனை பேரை மதம் மாற்றுகின்றோம்?" என்ற வரலாற்றுக் கோட்பாட்டுக் கேள்வியோடு முடித்துக் கொள்கிறது. இவ்வாறு புதிய சிந்தனைகளையும், வழிமுறைகளையும் அதே பழைய சாக்குப் பையினுள் போட்டுப் பூட்டி வைக்கும் பழமைவாதிகளாகவும், பயந்தாங்கொள்ளிகளாகவும் மறைபரப்பாளர்கள் செயற்படுவது வருத்தம் தருகிறது. ஏன் நாம் இயேசுவை நம் வழிகாட்டியாக, திருத்தூதர்களை நம் பணியின் முன்மாதிரிகளாக கொண்டு பயணிக்க முடியாது என்பது எமது ஆதங்கம்!

"மறைபரப்புதல்" என்பது "மதம் மாற்றுதல்" என்ற மத்திய கால வரலாற்றுச் சிந்தனை இலங்கையை போர்த்துக்கேயர் கைப்பற்றிய 1505ம் ஆண்டுகளில் காணப்பட்டது. இன்று மீள்நற்செய்தி அறிவிப்பு / புதிய வழி நற்செய்தி அறிவிப்பு என்று வத்திக்கான் திருச்சங்கத்தின் மாற்றங்களை உள்வாங்கிப் பயணிக்கும் 2020ம் ஆண்டிலும் "நான் இத்தனை பேருக்குத் திருமுழுக்குக் கொடுத்து கத்தோலிக்கராக்கினேன்" என்று பெருமைப்படும், ஆறுதலடையும் மறைபரப்புப் பணியாளர்களைச் சந்திக்கும் போது என்ன சொல்வது! இன்னும் போர்த்துக்கேயர் காலத்துச் சிந்தனையில் வாழும் இவர்களை கோமாவில் இருக்கும் நோயாளியைப் பார்ப்பது போல் பரிதாபமாய்ப் பார்ப்பதா? இல்லையேல் திருச்சபையின் ஆரோக்கியமான பரம்பலுக்கு முட்டுக்கட்டை போடும் முட்டாள்கள் என்று கோபப்படுவதா? இந்த பாழடைந்த சிந்தனைகளை தங்கவேலி போட்டுக் காக்கும் போக்கினை எப்போது நிறுத்துவார்களோ? இயேசு காண்பித்த அன்பினை மறையாய்ப் பரப்ப எப்போது ஆரம்பிப்பார்களோ? யாமறியோம் பராபரமே!

நற்செய்தி மீள்அறிவிப்புக் குறித்து அண்மையில் ஓர் புலமைபெற்றவர் பகிர்ந்தபொழுது அவர் சொன்னதன் சாரம்: மறந்து போனவர்களுக்கு நற்செய்தியை திரும்ப அறிவிப்பதுதான் நற்செய்தி மீளறிவிப்பு என்றமைந்தது. இன்று அநேகரின் சிந்தனை அப்படித்தான் உள்ளது. பைபிளை திரும்பச் சொல்லிக் கொடுப்பது, கட்டளைகளை திரும்ப மனனம் செய்ய வைப்பது, பாரம்பரிய நம்பிக்கைகளை, சடங்குகளை திரும்பத் திரும்ப நினைவுறுத்துவது என்று பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. ஆனால் யாருமே நாம் இப்போது நற்செய்தி அறிவிக்கும் யுகம் முற்றிலும் மாறுபட்டது என்பதைக் கண்டு கொள்வதாகவில்லை: விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகிய துறைகள் பாரிய வளர்ச்சி கண்டுள்ளது; உடல்நோயை விட உளநோயினால் அவதியுறும் மக்கள் பெருக்கத்தை சமூகம் சந்திக்கிறது; அநேக மக்களிடையே கடவுள் நம்பிக்கை கேள்விக்குறியாகியுள்ளது; தற்கொலைகளும், கொலைகளும், வாழ்க்கை நிகழ்வுகளாகிப்போன அவநம்பிக்கை நிறைந்த சமூகம் உருவாகியுள்ளது. இந்தச் சூழலில் நூற்றாண்டுகளுக்கு முன்சொன்னதைத் திரும்பச் சொல்வது எவ்வகையில் மறைபரப்பாக, நற்செய்தி மீளறிவிப்பாக அமையும்?

திருத்தூதரும், நம் ஆதித்திருச்சபையும் நமக்குக் கற்றுத் தந்த மறைபரப்புப் பணி எவ்வாறிருந்தது: காலமும் சூழலும் கண்டுகொள்ளுமாறு இயேசுவை முன்னிறுத்துங்கள் என்பதுதான்.

கடவுள் எங்களுக்காய் இயேசுவில் மனிதனானார்
எங்களோடு மனிதனாய் வாழ்ந்தார்
எங்களுக்காக பாடுபட்டு மரித்தார்
சாவையும் வென்று உயிர்த்தெழுந்தார்

என்ற நற்செய்தியின் சாரத்தினை **(Kerygma of the gospel)** மறைபரப்புதலில் அவர்கள் மாற்றவில்லை. மாறாக மக்களின் பிரச்சினைகள், அவர்கள் வாழ்ந்த சூழல், கலாச்சாரம், நம்பிக்கை என்பனவற்றிற்கு ஏற்ப அவர்களின் மறைபரப்புப் பணியும், வழிமுறைகளும் மாற்றம் பெற்றது. ஊற்றப்படும் பாத்திரங்களுக்கு ஏற்ப உருவ மாற்றம் பெறும் திரவம் தன்னிலையில் மாறாதது போல்தான் நம் மறைபரப்புப் பணியும் இருக்க வேண்டும் என்று திருத்தூதர்கள் எமக்குக் கற்றுத்தந்துள்ளார்கள். சிறந்த நற்செய்தி அறிவிப்பாளரான தூய பவுல் தம் பணி குறித்து இவ்வாறு சொல்கிறார்:

"கிறிஸ்துவிடம் மக்களைக் கொண்டுவர, - நான்
அடிமையாய் இல்லாதிருந்தும் - என்னை அடிமையாக்கிக் கொண்டேன்.
யூதருக்கு - யூதரைப் போலானேன்
திருச்சட்டத்திற்கு உட்பட்டவர்களுக்காக - திருச்சட்டத்திற்கு
உட்பட்டவன் போலானேன்
திருச்சட்டத்திற்கு உட்படாதவர்களுக்காக - திருச்சட்டத்திற்கு
உட்படாதவன் போலானேன்
வலுவற்றவர்களுக்காக - வலுவற்றவனானேன்
எப்படியாவது ஒருசிலரையேனும் மீட்கும்படி எல்லாருக்கும்
எல்லாமானேன்." (1கொரி 9: 19-22)

மக்களின் நிலையறிந்து, அவர்கள் வலி அறிந்து, அவர்கள் தேடலை உணர்ந்து, அவர்கள் போராட்டங்களை அங்கீகரித்து, அவர்கள் நம்பிக்கைகளை மதித்து, அவர்களில் ஒருவராக நின்று இயேசுவை அவர்களுக்கு அறிமுகம் செய்த பணிதான் நற்செய்தி மீளறிவிப்புப் பணியாக புனித பவுலை உதாரணமாகக் கொண்டு நம் திருச்சபை நமக்குக் கற்றுத்தருகிறது. மறைபரப்பு உலக நாளினை இம்மாதம் 18ம் திகதி நினைவுகூரும் வேளையில் திருமுழுக்கு வழியாக மறைபரப்புப் பணிக்கான அழைப்பினைப் பெற்றுள்ள நாம் ஒவ்வொருவரும் தற்காலச் சூழலில் வாழும் மக்களாக இயேசுவை வாழ்ந்து பறைசாற்றுவோம் என அழைத்து உங்களை வாழ்த்துகிறது திருமலைத்தீபம்.

- **ஆசிரியர்**


திருகோணமலை மறைமாவட்ட மாதாந்த பத்திரிகை

**திருமலைத்தீபம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆசிரியர் | : | பணி. சூசைமுத்து டக்ளஸ் ஜேம்ஸ் | தட்டச்சு | : | செல்வி. கி. டலக்ஷி |
| நிர்வாக உதவி | : | செல்வி. கிறிஷாந்தா குரூஸ் | கணினி வடிவமைப்பு | : | செல்வி. ர. நிரோன்ஜனி மெக்டலின் |
| விநியோக உதவி | : | திருமதி. ப. சுபாஷினி | அச்சகம் | : | வனசிங்க அச்சகம், மட்டக்களப்பு |
| | : | திருமதி. ஜெ. ஜெனிட்டா | | | |
| கணக்காளர் | : | திரு. S. கொலின் | பதிப்பு | : | மறைக்கல்வி நிலையம், 297, டொக்யாட் வீதி, திருகோணமலை |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்பணி. கிறிஸ்டி போல்
கண்டி மறைமாவட்டம்

# 3 ஏதேன் தோட்ட மனிதர்கள்



ஆதாமின் உடலுக்கு ஒப்பான ஒரு துணை அவன் முன்னே நின்ற விலங்குகளிடையே இருக்கவில்லை. அவனுடைய உடல் மற்ற எல்லா உயிரினங்களையும் விட வித்தியாசமானதாய் இருந்தது என்பதை அவன் உணர்கின்றான். இவ்வாறு மனிதனின் இம் முதல்தனிமை என்னும் அனுபவத்தில் 2 அம்சங்களை காணக்கூடியதாக இருக்கின்றது.

1. மனிதன் இறைவனோடு தனித்திருந்தான். அவரோடு நெருக்கமான உறவு கொண்டிருந்தான். கடவுள் படைத்த எல்லா உயிரினங்களிலும் மனிதன் ஒருவனே இறைவனோடு பேசி, அவர் குரலை கேட்டு, அவரோடு நெருங்கிப் பழகினான். கடவுள் மனிதனோடு தனித்துவமான முறையில் பேசிப்பழகினார். இதுவே முதல் தனிமையின் மிக முக்கியமான அம்சமாகும். நாம் இறைவனோடு தனித்துவமான முறையில் அவர் பிரசன்னத்தில் இருக்கின்றோம். விலங்குகளை போல் அல்லாமல் நாம் இறைவனோடு நெருங்கிப் பழக முடியும். எம்மை இறைவனோடு ஒன்றிணைக்க எமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஆன்மா எமக்கு உதவி செய்கின்றது. விலங்குகளுக்கு இவ்வான்மா கொடுக்கப்படவில்லை என்பதை நாம் அறிவோம். எம்மால் இறைவனை அறிந்து கொள்ளமுடியும். அவரை அன்பு செய்ய முடியும். இறைவன் தந்த பகுத்தறிவில் நாம் எதையும் நன்கு அறிந்து விளங்கிக் கொள்ள முடியும். ஆனால் விலங்குகள் மனிதரைவிட குறைவான அறிவைக் கொண்டிருக்கின்றன. அத்தோடு மனிதர்களாகிய எமக்கு அறிவு, ஞானம், புரிந்து கொள்ளும் தன்மை ஆகியன தரப்பட்டுள்ளன என்பது எமக்கே தெரியும்.

உதாரணமாக நாம் வேலை செய்கின்றோம், பாடசாலைக்குச் செல்கின்றோம், உறவுகளை ஏற்படுத்திக் கொள்கின்றோம். இவ்வாறான செயல்களை நாம் செய்கின்ற பொழுது நம் அறிவு வளர்கின்றது. எமது நடத்தை பற்றி நாமே தியானித்து சிந்தித்து செயல்படுகின்றோம். மனிதனின் சுயத்தை பற்றிய அறிவு **(Self Awareness)** முதல் தனிமையில் மிக முக்கியமான அம்சமாகும்.



மனிதன் தான் ஆன்மா மற்றும் உடல் ஆகியன உள்ளவன் என்று உணர்கிறான். "கடவுள் மனிதனை மண்ணால் உருவாக்கி தன் உயிர் மூச்சை ஊதினார்" என்ற வார்த்தைகள் மிக பெரிய உண்மையை புலப்படுத்துகின்றது. (தொ. நூல் 2:7) எல்லா உயிர்களும் மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டன. ஆனால் கடவுள் அவைகளுக்கு தன் உயிர் மூச்சைக் கொடுக்கவில்லை ஆகவேதான் மனிதனின் உடல் அவனது ஆள் தன்மையை **(Personhood)** வெளிப்படுத்துகின்றது என்கிறார் திருத்தந்தை. மிருகங்களின் உடல் அவ்வாறு வெளிப்படுத்துவதில்லை. இது மனிதர்களுக்கு மட்டுமே உள்ள தனித்தன்மையாகும். நாம் இந்த தனித்துவ அடையாளங்களை நன்கு அறிந்து இருக்கின்றோம்.

2. முதல் தனிமையின் இரண்டாவது மிக முக்கியமான அம்சமாய் இருப்பது "மனிதன் தனியாக இருந்தான்" என்பதாகும். மனிதன் தனது தனித்தன்மையை உணரும் அதேவேளை தனக்கு ஒரு குறைபாடு இருப்பதையும் அறிகின்றான். அதாவது அவன் தனிமையில் வாடுகிறான் இறைவனும் இக்குறையை காண்கிறார். ஆகவே, "மனிதன் தனியாக இருப்பது நல்லது அல்ல". என இறைவன் கூறுகின்றார். முதல் தனிமையின் 2வது அம்சமானது முதல் அம்சத்தைவிட வித்தியாசமானது. முதல் அம்சத்தில் மனிதன் படைப்பில் தன்னுடைய சிறப்பினை உணர்கின்றான். 2வது அம்சத்தில் தான் ஒரு தீவு போல தனிமையில் இருப்பதை உணர்கிறான்.

## முதல் ஒன்றிப்பு

மனிதனின் முதல் தனிமையை கண்ணுற்ற இறைவன் அவன் தனிமையை போக்கச் செயல்பட தொடங்கினார். அவர் ஆதாமுக்கு ஆழ்ந்த உறக்கம் வரச் செய்து, அவருடைய விலா எலும்பு ஒன்றை எடுத்து ஒரு பெண்ணை வடித்து அவளை அவனிடம் அழைத்து வருகின்றார். ஆதாம் கண் விழித்தபோது அவனுடைய உடலுக்கு ஒப்பான இன்னொரு உடலை கண்டான். அவ்வுடல் அவனின் உடலுக்கு ஒத்ததாயும், அதேவேளை அது வித்தியாசமானதாயும் இருந்தது. அது ஓர் மனித ஆள் **(Human Person)** என்பதையும் மனிதன் உணர்ந்து கொள்கிறான். அவளோடு இணைந்து கொள்ளவும் உறவை ஏற்படுத்திக் கொள்ளவும் ஆசைப்படுகின்றான்.

தன்னுடைய முந்தைய தனி வாழ்வை விடுத்து அவளோடு ஒருடலாய் வாழ ஆசைப்படுகின்றான். இதுவே முதல் ஒன்றிப்பாகும் **(Original Unity)** என்கின்றார் திருத்தந்தை. அவ்வுறவில் மனிதன் முழு திருப்தியை காண்கின்றான். அவன் இறைவனோடு ஒன்றித்திருக்கும் அதே வேளை சகமனிதரோடும் ஒன்றித்து இருப்பதில் திருப்தியை காண்கிறான். அவன் அவளோடு தனித்தும், அவ்விருவரும் ஒன்றித்தும் இருந்தார்கள். அத்தோடு இறைவனோடும் உறவில் வாழ்ந்தார்கள்.

எங்களுடைய வாழ்வின் அனுபவமும் இந்த உண்மையை கற்றுக்கொடுக்கின்றது. நாம் எங்களுடைய நாளாந்த வாழ்வுக்கான நடவடிக்கைகளை சரிவரச் செய்தாலும் நமக்குள் ஏதோ ஒரு குறை இருப்பதாக உணர்கின்றோம். நாம் தனியாக வாழ முடியாது என்பதையும் எமக்கு உறவு கொள்ள நண்பர்கள் தேவை என்பதையும் அறிந்துக் கொள்கின்றோம். எனக்கு "துணைவர்கள்" தேவை என்பதை முதல் தனிமை மற்றும் முதல் ஒன்றிப்பு என்ற அனுபவங்கள் எனக்கு கற்றுக்கொடுக்கின்றன. கடவுள் எம்மை படைத்தது அவரோடும் பிறரோடும் நட்பை ஏற்படுத்தி கொள்ளவே ஆகும். மூவொரு இறைவனும் தந்தை, மகன், தூய ஆவி என்கின்ற உறவிலேயே வாழ்கின்றார்கள். இறைத்தந்தை தனது மகனை அன்பு செய்கிறார். மகன் தந்தையை அன்பு செய்கிறார். அவர்களுக்கிடையே இருக்கும் அன்பாக தூய ஆவியானவர் திகழ்கின்றார். அவர்கள் ஆள்வகையில் மூவராக இருந்தாலும் இறைத்தன்மையில் ஒருவராக இருக்கின்றார்கள். இறைவனின் சாயலாக படைக்கப்பட்டிருக்கின்ற நாம் இறைவனைப்போல தனித்தன்மையுடையவர்களாய் நட்புடனும், உறவுகளுடனும் வாழ அழைக்கப்படுகின்றோம். நட்புதான் நம் வாழ்வு. நட்பிலேயே எமது வாழ்க்கை ஓடுகின்றது. தொடர்புகளும் உறவுகளும் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவை.

இவ்வாறு நாம் "தொடக்கத்திலே" நிகழ்ந்த நிகழ்வுகளை ஆராயும் போது, இறைவனின் திட்டம், அவருடைய விருப்பம் என்பன வெளிப்படுகின்றன. திருவிவிலியத்தில் முதல் இரு அதிகாரங்களிலும் உள்ள வார்த்தைகள் வழியாக மனித வாழ்வின் உண்மைகள் யாவை என்பது புலனாகின்றது. நாம் உறவுக்கே படைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதை இறைவன் படிப்படியாக வெளிப்படுத்துகின்றார். மனித வாழ்வை உயிரியல், அரசியல், பௌதீகவியல், மருத்துவம், பொருளாதாரம் ஆகிய துறைகளின் ஒளியில் பார்க்கும் போது ஒருசில உண்மைகளே வெளிப்படுத்துகின்றன. ஆனால், அவனுடைய வாழ்வுக்கான முழு நோக்கமும், இறைவனோடும் அவரின் திட்டங்களோடும் இணைத்து பார்க்கும் போதுதான் முழுமையாக வெளிபடுகின்றது. முதல் ஒன்றிப்பில் ஆதாம் தூக்கத்திலிருந்து விழித்த போது தனக்கென உருவாக்கிய ஏவாளை கடவுள் அவனிடம் அழைத்து வந்தார். அவன் அவளைக் கண்டான், அவள் மீது ஆசை கொண்டான். அவளை பார்த்தவுடனேயே அவனுக்குள் ஓர் இனம்புரியாத உணர்வு, மகிழ்ச்சி, ஈர்ப்பு என்பன கிளர்ந்தெழுந்தன. "இதோ இவள் என் எலும்பின் எலும்பும் சதையின் சதையும் ஆனவள்" என்று கூறிய ஆதாம் அவளை "பெண்" என்று அழைத்தான்.

தொடரும் ...

# கருணைக் கொலையும் மனித உயிருக்கு எதிரான குற்றச் செயலே!

**குணமாக்க முடியாதது என்பது கருணைகாட்ட முடியாதது என்பதல்ல**

வத்திக்கானின் விசுவாசக் கோட்பாட்டுக்கான பேராயம் திருத்தந்தை அவர்களின் அனுமதியுடன் யூலை 14, எனத் திகதியிட்டு வெளியிட்டுள்ள தீராத நோயால் பாதிக்கபட்ட நோயாளர்களைப் பராமரித்தல் பற்றிப் பேசும் Samaritanus Bonus (நல்ல சமாரியன்) என்ற கடிதத்தில், கருணைக் கொலையும் மனித உயிருக்கு எதிரான குற்றச் செயலே! குணமாக்க முடியாதது என்பது கருணைகாட்ட முடியாதது என்பதல்ல எனக் குறிப்பிட்டுள்ளது.

நோயாளர்கள், வைத்தியசாலைகள், தாதியர்கள் மற்றும் வைத்தியர்களின் பாதுகாவலரான புனித லேல்லிசின் கமிலஸ் அவர்களின் நினைவாக இக்கடிதத்தினை வெளியிட்டுள்ள பேராயம் நல்ல சமாரியனின் கருணைநிறைந்த செயலை நம் வாழ்வில் நிஜமாக்குதல் குறித்துப் பேசுகின்றது. குணமாதலே சாத்தியமில்லாத நோயாளிக்குக்கூட மருத்துவ உதவி, தாதிய உதவி மற்றும் உளவியல், ஆன்மீக உதவிகள் மறுக்கப்படக் கூடாது என்று திருச்சபையின் மனித உயிர்கள் மட்டில்





கொண்டுள்ள நம்பிக்கையினை உறுதியாக எடுத்துரைக்கிறது இம்மடல். நோயாளியே வேண்டிக்கொண்டாலும், அடுத்தவருடைய உயிரைக் கொல்வதற்கான முடிவினை நாம் எடுப்பது மனித உயிருக்கு எதிரான குற்றச் செயலே என வத்திக்கானின் ஏட்டினை மேற்கோள்காட்டிப் பேசுகிறது இம்மடல்: 'உயிருக்கு எதிராகச் செல்லும் அனைத்து வகைகளையும் சார்ந்த கொலை, இன ஒழிப்பு, கருக்கொலை, தீரா நோயின்போது உயிர்மாய்த்தல் ஆகியவை மனிதப் பண்பாட்டைக்கறைபடுத்துகின்றன. படைப்பின் இறைவனது மாண்பிற்கு இவை மாபெரும் முரண்பாடுகளாக உள்ளன.' (இன்றைய உலகில் திருச்சபை, இல.27)

**INCURABLE, NEVER UN-CARE-ABLE**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தைக்குத் தங்கள் கழுதையுடன் சென்ற தந்தை-மகன் கதையை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். இருவரும் கழுதையுடன் நடந்து சென்று கொண்டிருந்தனர். அவ்வழியே சென்றவர்கள் அவர்களைப் பார்த்து சொன்னார்கள் "இவர்கள் மடையர்கள், கழுதை எதற்காக?, அதன்மேல் ஏறி பயணம் செய்வதற்கல்லவா?" என்று சொல்லி சிரித்தார்கள். இதைக் கேட்ட தந்தை தன்



மகனைக் கழுதையின் மேல் ஏற்றி பயணத்தைத் தொடர்ந்தார். மேலும் அவ்வழியே போய்க் கொண்டிருந்த சிலர், "பாருங்கள் அந்த சோம்பேறி மகனை! தந்தையை நடக்கவிட்டு அவன் கழுதைமேல் ஏறிச் செல்கின்றான்" என்றனர். இதைக்கேட்ட தந்தை மகனைக் கீழே இறக்கிவிட்டு தான் கழுதைமேல் ஏறிப் பயணம் செய்தார். மீண்டும் இதைப் பார்த்த பெண்கள் இருவர் "இந்த தந்தைக்கு வெட்கமில்லையா? தனது சிறிய மகனை நடக்க வைத்து தான் கழுதை மேல் சவாரி செய்கிறானே?" என்றனர். தந்தைக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. மகனையும் கழுதையின் மேல் ஏறச் சொன்னார். இருவரும் இப்போது சந்தை வீதியை நெருங்கிக்கொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்த சிலர் நையாண்டி பண்ணிச் சிரித்தனர். அவர்கள் ஏன் கேலி பண்ணிச் சிரிக்கிறார்கள் என அங்கிருந்தவர்களிடம் தந்தை விசாரித்தார்.

# "இல்லை" என்று சொல்லக் கற்றுக் கொள்ளுங்கள்



"இருவரும் கழுதைமேல் ஏறி கழுதைக்கு அதிக சுமையைக் கொடுத்து, மிருகவதை செய்கிறீர்கள் எனச் சொல்லுகின்றனர்" எனப் பதில் வந்தது. தந்தையும் மகனும் என்ன செய்வதென்று கடுமையாகச் சிந்தனை செய்தபின் கழுதையின் நான்கு கால்களையும் கட்டி ஒரு தடியைக் கால்களுக்குள்ளே கோர்த்து தோளிலே சுமந்து சென்றனர். சந்தைப் பகுதியை நெருங்கியபோது அங்கே ஒரு பாலத்தைக் கடக்க வேண்டியிருந்தது. பாலத்தை இருவரும் கடக்கையில் கழுதையின் ஒரு காற்கட்டு அவிழ்ந்தது, மகனை தட்டி வீழ்த்தியது. அதன்பின் பாலத்தின் கீழேயுள்ள ஆற்றிலே வீழ்ந்தது. கால்கள் கட்டப்பட்டிருந்தபடியால் தப்பிக்க வழியின்றி ஆற்றிலே மூழ்கியது. இவ்வளவு நேரமும் இவர்களைப் பின்தொடர்ந்து கொண்டிருந்த வயதான



பெரியவர் இவ்வாறு கூறினார். "எல்லோரையும் திருப்திப்படுத்த நினைத்தால் இறுதியில் எவரையுமே திருப்திப்படுத்த முடியாது."

இயேசு பாலைவனத்தில் சோதிக்கப்பட்ட போது தந்தையின் விருப்பத்திற்கு மாறாக செயற்படச் சாத்தான் சோதித்தான். தனது பசியைத் தீர்த்துக் கொள்வதற்காக தனது சக்தியையே பயன்படுத்துமாறும், இறைவல்லமையைப் பயன்படுத்தி எல்லோரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கும் இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியத்தை செய்யும்படியும் சாத்தான் தூண்டினான். மக்களை மீட்கத் தந்தை காட்டிய வழியான அன்பையும் தியாகத்தையும் புறந்தள்ளி குறுக்கு வழியைக் கையாளத் தூண்டிய சாத்தானின் சூழ்ச்சிக்கு உறுதியாக "இல்லை" என்று இயேசு பதிலளித்தார். அதன்மூலம் துன்பம் நிறைந்த பாதையாகிய சிலுவை மரணத்தை ஏற்றுக் கொள்ள திடசங்கற்பம் பூண்டார். வானிலிருந்து அறிகுறியை மக்கள் கேட்டபோது, "இம்மக்களுக்கு வானிலிருந்து அறிகுறி எதுவும் கொடுக்கப்படாது" என்று மறுத்துக் கூறினார். இதன்மூலம் தேவையேற்படும் போது "இல்லை" என்று சொல்ல இயேசு கற்பிக்கின்றார்.

முதலிலே எமக்கு நாமே "இல்லை" என்று சொல்லக் கற்றுக் கொள்ள வேண்டும். விசித்திரமான நோய் ஒன்று உண்டு. இது அக்றாசியா (**Akrasia**) என்ற கிரேக்க சொல்லினாலே அழைக்கப்படுகிறது. மிகச் சரியான அல்லது மிகப் பொருத்தமான எமது தீர்மானங்களுக்கெதிராக நாமே செயற்படுகின்ற மனநிலையே இதுவாகும். எமக்கு நன்மை பயக்கும் விடயம் எனத் தெரிந்தும் அதற்கு மாறாக வேறொன்றைச் செய்வதே இந்நோயாகும். இன்னொரு வகையில் எமக்கு நாமே "இல்லை" எனச் சொல்ல முடியாத நிலையாகும். உதாரணமாக, எனது உடல் எடையைக் குறைக்க வேண்டுமென எனக்கு நன்றாகத் தெரிந்தும் உணவைக் கட்டுப்படுத்தாமல் இருத்தல். எனது உடலுக்கு "இல்லை" எனச் சொல்ல எனக்கு முடியவில்லை. கடன் இல்லாமல் வாழ வேண்டுமென்றால் ஆடம்பரச் செலவுகளுக்கு "இல்லை" எனச் சொல்ல வேண்டும். வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமெனில் சோம்பேறித்தனத்துக்கும் தேவையற்ற பொழுதுபோக்குகளுக்கும் "இல்லை" எனக் கூற வேண்டும். பிரபல்யமான எழுத்தாளர் றொபின் சர்மா "தனது காரை விற்ற துறவி" (The Monk who Sold his Ferrari) என்ற நூலில் இவ்வாறு கூறுகின்றார். "முக்கியமற்றவைக்கு "ஆம்" என்று கூறும் ஒவ்வாரு தடவையும் முக்கியமானவைகளுக்கு "இல்லை" எனக் கூறுகின்றோம். எதற்கு "ஆம்" எனவும் எதற்கு "இல்லை" என்றும் சொல்லக் கற்றுக் கொள்ள வேண்டும். இதற்கு மதிப்பு அடிப்படையிலான முன்னுரிமையை வகுத்துக் கொள்வது இன்றியமையாததாகும். மதிப்பு அடிப்படையிலான முன்னுரிமை சார்ந்து தான் "ஆம்" அல்லது "இல்லை" என்பது அமைய வேண்டும். உங்களுடைய நண்பர் இரவு விருந்தொன்றிற்கு உங்களை அழைக்கிறார் ஆனால் அன்று உங்கள் மகனது பிறந்தநாள் வீட்டில் நடைபெற உள்ளது. உறுதியாக "இல்லை" என்று உங்கள் நண்பனுக்குச் சொல்லுவீர்களல்லவா? இதுதான் மதிப்புசார் முன்னுரிமை அளித்தலாகும். நண்பர்களோடு சினிமா பார்க்கப் போவதா? ஞாயிறு திருப்பலி செல்வதா? மதிப்பு சார் முன்னுரிமை இங்கு முதலிடம் பெறுகிறது.

வீண் வதந்திகளைப் பரப்பும் நண்பர் கூட்டத்திற்கு "இல்லை" எனக் கூறக் கற்றுக் கொள்ள



வேண்டும். மெய்யியல் மேதையான சோக்ரடீஸ் பெயரில் எழுதப்பட்ட மூவகை தரப்படுத்தல் சோதனைக் (Triple Filter Test) கதைகளில் ஒன்றைப் பார்ப்போம். சோக்ரடீசைச் சந்தித்த நபர் ஒருவர் "உங்கள் நண்பர்களுள் ஒருவரைப் பற்றி சற்றுமுன் என்ன கேள்விப்பட்டேன் என்று தெரியுமா?" என்றார். "சற்றுப் பொறுங்கள், அதற்குமுன் மூன்று சோதனைகள் செய்ய விரும்புகிறேன்", அதை மூவகைத் தரப்படுத்தல் சோதனை என்பர்" என்றார் சோக்ரடிஸ். "அப்படியா", என்று ஆச்சரியத்தோடு சோக்ரடீசைப் பார்த்தார் அந்நபர். முதலாவது தரப்படுத்தல் **"உண்மை"**. எனது நண்பரைப் பற்றி நீங்கள் கூறப்போகும் விடயம் உண்மையென்று உங்களுக்குத் தெரியுமா?" என்று சோக்ரடீஸ் கேட்டார். "இல்லை, உங்கள் நண்பர் பற்றி நான் கேள்விப்பட்டதே அன்றி அதன் உண்மை நிலை எனக்குத் தெரியாது" என்றார் அந்த நபர். இரண்டாவது தரப்படுத்தல் **"நன்மை"**. என் நண்பரைப் பற்றி சொல்லும் விடயம் நல்லதா?" எனக் கேட்டார் சோக்ரடீஸ். "இல்லை, உங்கள் நண்பர் பற்றி நான் கூறப்போகும் விடயம் கெட்டது" என்றார். மூன்றாவது தரப்படுத்தல் **"பயன்"**. நீங்கள் கூறப்போகும் விடயத்தால் எனக்கு ஏதும் பயன் உள்ளதா?" எனக் கேட்டார் சோக்ரடீஸ். "எவ்வித பயனுமில்லை" என்றார் அந்நபர். **"ஆகவே, நீங்கள் கூறப்போகும் விடயம் உண்மையுமல்ல, நல்லதுமல்ல, பயனுள்ளதுமல்ல"** எனக் கூறி முடித்தார் சோக்ரடீஸ்.

3

அருட்தந்தை S. A. பொன்சியன் அமதி



"இல்லை" எனச்சொல்வதற்கு அழகான வழிமுறையைக் கண்டுபிடித்திருந்தார் சோக்ரடீஸ். தேவையற்றவைகளுக்கு உறுதியாக "இல்லை" என்று சொல்லும் பண்பை எம் இளையோருக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். தொடர்பு சாதனங்கள் மற்றும் சகபாடிகளின் செல்வாக்கால் இளையோர்கள் கவர்ந்திழுக்கப்படுகின்றனர். இவற்றின் இழுப்புக்கு இளையோரால் "இல்லை" எனச் சொல்ல முடிவதில்லை. புகைத்தல், குடித்தல், போதைவஸ்து பாவனை போன்ற பரீட்சார்த்த முயற்சிகள் படிப்படியாக நிரந்தரமான அடிமை நடத்தைகளாக மாறிவிடுகின்றன. எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும், இலட்சியக்கனவை எவ்வாறு வளர்த்துக்கொள்ள வேண்டும், தொடர்புசாதனங்கள், சகபாடி நண்பர்களால் ஏற்படும் எதிர்மறைத் தாக்கம் போன்றவற்றை இளையோருக்குப் புரியவைத்து முன்னுரிமை அடிப்படையில் வாழ்வை எப்படிக் கட்டியெழுப்பலாம் எனச் சொல்லிக் கொடுக்க வேண்டும். இளையோர்கள் வாழ்வின் நீரோட்டத்திலே இலகுவாக இழுத்துச் செல்லப்படக் கூடிய அபாயம் உண்டு. பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூகப்பெரியார்கள் இளையோருக்கு வழிகாட்டுவதன்மூலம் வாழ்வின் நடைமுறைசார்ந்த விடயங்களை எவ்வாறு உய்த்துணர்வது, விழுமியம்சார் வாழ்வை எவ்வாறு கட்டியெழுப்புவது சம்மந்தமாக உதவ முடியும். நற்செய்தி விழுமியங்களின் அடிப்படையில் "ஆம் எனவும் "இல்லை" எனவும் சொல்ல இளையோரை பயிற்றுவிப்பது சிறந்தது.

## வெற்றியைக்காண்போமே ...

அருட்பணி. என்.சி. அருள்வரதன்

பொல்லாத நிலைகள் வாழ்விலே
போற்றுதற்குரியதல்லவே
அல்லல்கள் அவலங்கள் எதுவந்தாலும்
அனைத்தையும் பொறுமையாய் ஏற்றுக்கொண்டே
நன்மைமை நாம் தொடர்வோமே

அநீதிகள் குரோதங்கள் இவைகளால்
ஆவது ஒன்றுமே இல்லையே
பழிகளும் வேற்றுமை உணர்வுகளும்
வழிமாற வைக்குமே நம் வாழ்வை எனவே
மாற்றியே நம் வாழ்வை வளமாக்குவோமே

மன்னிக்கும் மன உணர்வு
மனிதருக்கு அவசியமே
பிரிவுகளும் பிளவுகளும்
நம்மோடு இணையாமல்
அன்போடு வாழ்வதே நம் கடனாகும்

ஒற்றுமை அன்பு நட்பு
உறவுக்கு வேண்டியதே
இவைகளை ஒதுக்கி வாழ்விலே
உயர்வினைக் காண்பது அரிதே
உணர்வோம் இதனை உணர்ந்தே வளர்வோமே

பகைமைக்குப் பலவழிகள் அவைகளால்
வாழ்வதால் நமக்குப் பயனென்ன
அநீதிகளை அடியோடு மறந்துவிட்டு
நீதியின் பாதைகளைப் பின்பற்றவே
உண்மையில் வெற்றியைக் காண்போமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் படம்



"அநாதைகளாக" உணரும் ஒவ்வொரு உயிருக்கும் அருகில் இருக்கிறார் இந்த அரவணைக்கும் தந்தை.

Photo போஸ் கொடுக்கும் தலைவர்களே! இது அடையாளமல்ல - உங்களுக்கான அழைப்பு.

"உடைமைகளற்றோரை அடிக்கவல்ல அரவணைக்கவே என்னைத் தேர்ந்தெடுத்தார்"

செயல் பேசும்போது வார்த்தைகள் மௌனிக்கின்றன.

சிறுவரோடு சிறுவராகும் வயோதிபரோடு வயோதிபராகும் பணிவுதான் - பணிவாழ்வின் சிறந்த உதாரணம்!

அதிகாரங்களும் பதவிகளும் காணாமல்போகின்றன குழந்தையின் அருகில்!



"தொட்டால் தீட்டு" என்னும் சமயத்தலைவர்கள் மத்தியில் தீட்டுக்களை தகர்த்து தொடும் இவரை "சமயத் தலைவர்" என்றழைக்காதீர் "மானுடத் தலைவர்" என்று விழியுங்கள்!

ஆள்பார்த்து அந்தஸ்து பார்த்து இனம் பார்த்து பணம் பார்த்து வருவதல்ல - உண்மை அன்பும் பாசமும்

"போதிப்பதற்கல்ல வாழ்வதற்கே என்னை அர்ப்பணித்தேன்"

## உங்கள் நன்கொடைகளால் திருமலைத்தீபத்தின் நற்செய்திப் பணியில் கைகோருங்கள்.



எமது மறைமாவட்டத்தின் செய்தி ஊடகமாகவும், இறையியல் மற்றும் மறைக்கல்வி கற்றல் ஊடகமாகவும், செயற்படும் திருமலைத்தீபத்தின் பயணத்தில் நீங்களும் உங்கள் நன்கொடைகளால் பங்காளிகளாகலாம்.

உங்கள் நன்கொடைகளை மறைமாவட்ட மறைக்கல்வி நிலையத்தில் நேரடியாகச் செலுத்தியோ அல்லது திருமலைத்தீபத்திற்கான பிரத்தியேக வங்கிக் கணக்கிலிட்டோ எம் பணிக்கு உறுதுணையாகலாம்.

உங்கள் சிறிய காணிக்கைகளும் உலகம் முழுவதும் அச்சுப்பதிப்பாகவும், டிஜிட்டல் பதிப்பாகவும் (PDF) பகிரப்படும் திருமலைதீபத்தின் பயணத்தை வலுப்படுத்தும் என்பதை மறவாதீர்கள்.

**எம் நற்செய்திப் பணியில் பங்காளிகளாகுங்கள்.**

**HNB வங்கிக் கணக்கு - THIRUMALAI THEEPAM**
**கணக்கு இலக்கம் - 22502009194**

## மனித மாண்பு எங்கே?



கொரோனாவா கொவிட் 19ன் டீனா
திடீர் தொற்றால் அன்று தொட்டு இன்று வரை
உயிரிழந்தோர் ஏராளம்
நூறுகள், ஆயிரங்கள், லட்சங்களாகி
உயிர்களைக் காவு கொண்டதே
ஊண்இன்றி உறக்கமின்றி
உறவுகள், குடும்பங்களை மறந்தே
உயிர்களைக் காக்கவென்று
இரவு பகலென்ன, நேரம் காலமென்ன
அயராத உழைப்பால் தாதியர்கள்
உயிர் காக்கும் சேவைதனைச் செய்து
தம் உயிர்களை இழந்து நிற்கும்
மனிதம் காக்கும் உயர்ந்த பணியின்
பணி சிறக்க இறைதுணை வேண்டி
நிற்பதுதான் மனிதம் என்பதை
உணர்வோம் நாம்

செல்வி P. கௌசல்யா
125, உட்துறைமுக வீதி,
திருகோணமலை

# படித்ததில் பிடித்தது

# ஓட்டைகள்

அருட்பணி. T. கிங்ஸ்லி றொயட்

நல்ல ஆயன்.
ஆடுகளை ஒன்று சேர்த்தான்.
மேய்ச்சல் நிலத்திற்கு ஓட்டிச் சென்றான்.
வயிறு புடைக்க மேய விட்டான்.
நீரோடையில் தாகம் தீர்த்தான்.

தாய் பின் தொடர...
புதிதாய் பிறந்த குட்டியைத் தோளில் போட்டுக்கொண்டு நடந்தான்.
எல்லா ஆடுகளையும் பத்திரமாய் ஓட்டி வந்து பட்டியில் அடைத்தான்.

அடைத்திருந்த ஓர் ஆட்டுக்கு விடுதலை உணர்வு கிளம்பியது.
"இது ஒரு சிறை வாழ்வு.
தப்பிச் சென்று சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பேன்."
முடிவெடுத்தது
ஆயன் தூங்கும்போது..
ஆட்டுப்பட்டியின் மூலையில்
இரகசியமாய் ஓட்டை
ஒன்றைப் போட்டது.
அதன் வழியே தப்பியது.
தனக்குத் தானே
சொல்லிக் கொண்டது:
"என் வழி... தனி வழி..."



அருகிலிருந்த புல்வெளியில் மேய ஆரம்பித்தது.
சுதந்திரக் காற்றைச் சுவாசித்தது.
"ஆஹா...
இதுவல்லவோ சுதந்திரம்."

இருட்டில் பதுங்கிப் பார்த்த ஓநாய் ஒன்று.
ஆட்டின் மீது பாய்ந்தது.
மயிரிழையில் தப்பியது ஆடு.
தலை தெறிக்க ஓட ஆரம்பித்தது.
விடாமல் விரட்டிய ஓநாய்க்குத் தப்பி,
அரை உயிர் கால் உயிராகத் திரும்பியது.
ஓட்டை வழியே நுழைந்து தூங்கிய ஆடுகளோடு கலந்தது.

தனக்குள்ளே சொல்லிக்கொண்டது:
"இது சிறையல்ல...பாதுகாப்பகம்..."

நடந்ததைக் கவனித்த ஆயன்
தனக்குள் சிரித்துக் கொண்டான்.
ஆனால்,
ஓட்டையை மட்டும் ஏனோ
கடைசி வரை அடைக்கவே இல்லை.

பெற்றோரின் கண்டிப்பான வீடு.
இளைஞனே...!
உனக்குச் சிறை வாழ்வாய்த் தான் தெரியும்.
வெளியே அடிபடும் வரை...!

**பெற்றோரின் கண்டிப்பான வீடு.**
**இளைஞனே...!**
**உனக்கு சிறை வாழ்வாய்த்தான் தெரியும்**
**வெளியே அடிபடும் வரை...!**

'அறிவை விரும்புவோர் கண்டித்துத் திருத்தப்படுவதை விரும்புவர்" (நீ. மொ- 12:1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னுமா தயக்கம்! 13

# நன்னம்பிக்கை

அருட்பணி. அலெக்ஸ் மரிய செல்லையா க ச

இறைஇயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே! மீண்டும் திருமலை தீபம் இதழ் வாயிலாக உங்களை மீண்டும் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். நம் வாழ்வு நம் எண்ணங்களுக்கேற்ப குறிப்பாக நாம் கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் வளர்ச்சியடைகின்றது என்பதை சென்ற இதழில் பார்த்தோம். இந்த எண்ணங்களையும் நம்பிக்கைகளையும் சரியானவையாக பெற்றுக்கொள்வதெப்படி என்பதை இந்த இதழில் பார்ப்போம்.



ஒரு மனிதன் தன் நம்பிக்கைகளை சீர்படுத்திக்கொண்டால் அவன் முதிர்ச்சியடைந்து விடுகிறான். சரியான நம்பிக்கை நம் மகிழ்வுக்கு வழிகோலும். தவறான நம்பிக்கை நம் துன்பங்களுக்கு வழிகோலும்.

இதற்கு எடுத்துக்காட்டாக சிறுவயதில் நாம் படித்த ஒரு கதை ஒன்றை நினைவுறுத்த விழைகின்றேன். ஒரு குரங்கு காட்டில் ஒரு ஆற்றங்கரையோரம் நின்ற நாவல் மரத்தில் நாவல்பழங்களைப் பறித்து தின்றுகொண்டிருந்தது. அப்போது நீருக்குள் இருந்த முதலை ஒன்று அந்தக் குரங்கிடம் தனக்கும் கொஞ்சம் நாவல்பழம் பறித்துப் போடும்படி கேட்கின்றது. உடனே குரங்கும் சில பழங்களைப் பறித்து முதலையின் வாயில் போடுகின்றது. அதை ருசித்த முதலை, தன் மனைவிக்கும் பழங்கள் கொடுக்க நினைத்து, இன்னும் சில பழங்களை குரங்கிடம் கேட்கின்றது. குரங்கும் தன் புதிய நண்பனுக்காக நிறைய பழங்களைப் பறித்து போடுகின்றது. இந்தப் பழங்களை தன் வாயில் வைத்து தன் மனைவிக்கு எடுத்துச் சென்றது அந்த முதலை. நாவல் பழங்களை சுவைத்த மனைவி முதலைக்கு ஒரு விபரீதமான ஆசை தோன்றியது. தன் ஆசையை தன் கணவன் முதலையிடம் சொன்னது. அந்த ஆசை என்னவென்றால், "குரங்கு எப்போதும் உண்ணும் இந்தப் பழமே இவ்வளவு சுவையாக இருக்குமென்றால், அந்த குரங்கின் ஈரல் எவ்வளவு சுவையாக இருக்கும்! இத்தகைய சுவையான குரங்கின் ஈரலை நான் சுவைக்க வேண்டும்!" என்பது தான். இந்த ஆசையைக் கேட்டதும் ஒரு நிமிடம் கணவன் முதலை சற்று ஆடித்தான் போய்விட்டது. ஆனாலும் தன் மனைவியின் நச்சரிப்பு தாங்காமல், குரங்கின் ஈரலை தன் மனைவிக்கு கொடுக்க முடிவு செய்தது. அதற்கான சந்தர்ப்பம் தேடி காத்திருந்தது. ஒருநாள், அது குரங்கை தந்திரமாக நதியின் நடுப்பகுதிக்கு கொண்டுவந்து குரங்கைக் கொன்று ஈரலை எடுக்க முடிவு செய்தது. அதன் படி அது கரைக்கு வந்து அந்தக் குரங்கிடம் பேச்சு கொடுத்தது. "நண்பா, நீ கொடுத்த நாவல்பழங்கள் மிகவும் சுவையாக இருந்தன. அவற்றை என் மனைவியிடம் கொடுத்தேன், அவளுக்கும் அதன் சுவை மிகவும் பிடித்துவிட்டது. எனவே இத்தகைய சுவையான ஒரு பழத்தை எங்களுக்கு கொடுத்த உனக்கு நாங்கள் இருவரும் விருந்து ஒன்று ஏற்பாடு செய்துள்ளோம். அந்த விருந்துக்கு நீ கண்டிப்பாக வரவேண்டும்" என்று தன் கபட வேண்டுகோளை குரங்கிடம் வைத்தது முதலை. சற்று யோசித்துவிட்டு தன் புதிய நண்பனை மனம் நோகச் செய்ய விரும்பாத குரங்கு முதலையின் வீட்டுக்கு விருந்துக்கு வருவதற்கு சம்மதித்தது. அதன் படி முதலை குரங்கை தன் முதுகில் ஏற்றிக் கொண்டு ஆழமான அந்த ஆற்றில் நீந்தி தன் மனைவி இருக்கும் இடத்திற்கு வந்தது. அங்கே குரங்கிற்கு பிடித்த பல பழங்கள், தேன் போன்றவற்றை தயாராக வைத்து காத்திருந்தது மனைவி முதலை. குரங்கிற்கு முதலில் அவர்கள் அறுசுவை உணவாக அந்தப் பழங்களை பரிமாறினர். நன்றாக சாப்பிட்டபின்,





குரங்கு, "நீங்கள் இருவரும் சாப்பிடவில்லையா, நீங்களும் சாப்பிடுங்கள்!" என்று முதலைகளிடம் கேட்டது. அதற்கு கணவன் முதலை, "மன்னித்துவிடு நண்பா, நாங்கள் உன் ஈரலுக்கு குறிவைத்து தான் உனக்கு இந்த விருந்தை கொடுத்தோம். இப்போது உன்னைக் கொன்று உன் ஈரலை எடுக்கப் போகிறோம்!" என்று தன் திட்டத்தை குரங்கிடம் சொன்னது. மனதிற்குள் பதறிய குரங்கு இந்த இடத்திலிருந்து எப்படி தப்பிக்கலாம் என்று யோசித்தது. முதலைகளிடமிருந்து தப்பித்து இந்த ஆற்றை நிச்சயமாகக் கடக்க முடியாது. தன் சக்தியை நம்பி தப்பிக்க நினைப்பது முட்டாள் தனம். எனவே முதலையின் வழியிலேயே முதலையை ஏமாற்றி தப்பிக்க வேண்டும் என்று முடிவெடுத்து சிந்தித்தது. அதன் சிந்தனையில் ஒரு யோசனை உதித்தது. அதன் படி அது கணவன் முதலையைப் பார்த்து உரக்க சிரித்தது. முதலைக்கு சற்று ஆச்சரியம். அவனைக் கொல்லப் போகின்றோம் என்று சொன்னதன் பின் இப்படி சிரிக்கின்றானே, என்று குழம்பியது. குரங்கே அதற்கான பதிலையும் சொன்னது, "ஐயோ நண்பா, முதலிலேயே நீ உன் ஆசையைச் சொல்லியிருந்தால், நான் அதற்குத் தயாராக வந்திருப்பேன் அல்லவா! நேற்று நான் இந்த ஆற்றில் மூழ்கிக் குளித்துவிட்டு வெளியே வந்தபோது என் ஈரல் நன்றாக நனைந்துவிட்டது. அதனை நான் காயவைப்பதற்குள் மிகவும் சிரமப்பட்டுவிட்டேன். அதனால், உன்னோடு ஆற்றில் வருவதை நினைத்து, மீண்டும் தண்ணீரில் ஈரல் நனைந்துவிடுமோ என்று பயந்து அதைக் கழற்றி கொடியில் காயவைத்துவிட்டு வந்துள்ளேன். என் ஈரலை உனக்கு மிகவும் பிடிக்கும் என்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. என்னோடு வா, நான் கொடியில் காயவைத்துள்ள ஈரலை எடுத்துத் தருகின்றேன், நீங்கள் இருவரும் சுவைக்கலாம்!" என்று கூறியது. சற்று ஏமாற்றமடைந்த கணவன் முதலை, குரங்கு சொன்னதை உண்மை என்று நம்பி அதை தன் முதுகில் சுமந்து கொண்டு மீண்டும் கரைக்கு கொண்டுவந்தது. கரைக்கு வந்ததும் முதலையின் முதுகிலிருந்து தாவி மரத்தில் ஏறிய குரங்கு, "அடே முட்டாள் நண்பா, ஈரலை எவனாவது கழற்றி வைக்க முடியுமா, கழற்றினால் உயிரோடு இருக்க முடியுமா? என்னையே கொல்ல நினைத்தாயா, இனி நான் உன் கையில் சிக்கவே மாட்டேன்!" என்று கூறி மரத்திற்கு மரம் தாவி ஓடி தப்பியதாம்.

இந்தக் கதையில், முதலை தனக்கு நல்லது செய்யும் என்று நம்பிய குரங்கு ஆபத்தில் மாட்டியது. பிறரை ஏமாற்றி லாபம் சம்பாதிக்கலாம் என்று நம்பிய முதலை ஏமார்ந்து போனது. இங்கே ஒரு தவறான நம்பிக்கை தோல்வியையும் துன்பத்தையும் அதை நம்பியவர்களுக்குக் கொடுத்துவிட்டது. அது தான் தீமையின் இயல்பு.

இன்றைய கால உலகத்தில், யார் சிறந்த முறையில் அடுத்தவரை ஏமாற்றுகிறார் என்பதை மையப்படுத்தியே தன் வியாபாரங்களை மனிதன் ஏற்படுத்திக் கொண்டுள்ளான். இது ஒரு மாயை நிறைந்த உலகம். இங்கு மேலும் மேலும் மாயைகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றதே தவிர உண்மைக்கு இருந்த கொஞ்ச இடமும் பறிக்கப் பட்டுக்கொண்டிருக்கின்றது. மனிதன் பிறரை ஏமாற்றுவதன் மூலம் வெற்றியடைந்துவிடலாம் என்று தவறாக எண்ணிக் கொண்டிருக்கின்றான். இது ஒரு பெரிய மாயையாகும். நம் வாழ்வு வெற்றியடைவதைப் போன்ற ஒரு தோற்றத்தை மட்டுமே இது உருவாக்குகின்றதே தவிர ஒருபோதும் வெற்றியை தருவதே இல்லை. நாம் பல விதங்களில் நம் மகிழ்ச்சியைத் தவறவிட்டுக்கொண்டே தான் இருக்கின்றோம். இதனால் ஏமாற்றங்களே நம் வாழ்வின் எதார்த்தங்களாக மாறிவிட்டன.

இதுபோன்று மாயைகளால் நிறைந்துள்ள உலகில் இறைவன் இயேசு நம்மை ஒரு மாற்றுச் சிந்தனைக்குள் வர அழைக்கின்றார். இந்த மாற்றுச் சிந்தனை, உண்மையை அடிப்படையாகக் கொண்ட செயல்பாடுகளுக்கு நமக்கு அழைப்பு விடுக்கின்றது. செப்டம்பர் மாதத்தில் நாம், சிலுவையின் மாட்சியின் விழா, வியாகுல அன்னையின் விழா, புனித பிரான்சிஸ் அசிசியாரின் ஐந்து காய விழா என்று பல தியாகங்களின் விழாக்களைக் கொண்டாடுகின்றோம். இவ்விழாக்கள் கிறிஸ்தவத்தின் உண்மை மனநிலையை நமக்கு சொல்லிக் கொடுக்கின்றன.

அடிமைகளைக் கொல்ல பயன்படுத்தப்பட்ட சிலுவை இன்று நம் வெற்றியின் சின்னமாக அமைந்துள்ளது. பல துன்பங்களின் அடையாளங்களான அன்னையின் வியாகுலங்களை திருச்சபை, 'அன்னையின் அலங்காரங்கள்' என்று கூறுகின்றது. ஆண்டவரிடம் நம் குறைகளை பெரிதாக எடுத்துரைத்து அதற்கு அவரிடமிருந்து உதவியைப் பெறுவதே ஜெபம் என்றெண்ணிக் கொண்டிருக்கும் உலகில், 'இறைவா நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்' என்று புனித பிரான்சிஸ் அசிசியார் ஜெபித்தார். அத்தோடு நின்றுவிடவில்லை 'இறைவா நீர் சிலுவையில் பட்ட பாடுகளின் ஒரு பகுதியை எனக்கும் தா, நானும் உன்னோடு அந்த சிலுவை துன்பத்தை அனுபவிப்பேன்!" என்று அவர் ஜெபித்த ஜெபத்தின் விளைவாக இயேசுவின் சிலுவைப்பாடுளான ஐந்து காயங்களை தன் உடலில் சுமந்து அந்த வேதனைகளை தானும் அனுபவித்து, இறைவனுக்கே ஆறுதல் சொல்லும் நிலைக்கு அவர் உயர்கின்றார்.

அன்பார்ந்தவர்களே, ஆண்டவர் இயேசு, "நல்ல கனிகொடுக்கும் கெட்ட மரம் இல்லை, கெட்ட கனிகொடுக்கும் நல்ல மரம் இல்லை" என்று கூறுவார். 'நாம் செய்யும் எந்த நன்மையும் நமக்கு தீமையைப் பெற்றுத்தராது, நாம் செய்யும் எந்த தீமையும் நமக்கு நன்மையைப் பெற்றுத்தராது!' என்பதே இதன் பொருளாகும். ஆனால், எனக்கு நன்மை நிகழும் என்று நம்பி பிறரை நாம் ஏமாற்றுகிறோம், பல தீமைகளை செய்துகொண்டே இருக்கின்றோம். இதன் விளைவாக நாம் விரக்தியையும் ஏமாற்றத்தையுமே பரிசாகப் பெறுகிறோமே தவிர எந்த நன்மைகளையும் பெற்றுக் கொள்ள முடியாது. மேல்சொல்லப்பட்ட குரங்கு முதலை கதையில், ஒன்று மற்றொன்றை விட அறிவாளியாக மாற நினைத்து தோல்வியைத் தழுவியதை இதன் அடிப்படையில் புரிந்துகொள்ள வேண்டும். யாரும் யாரையும் ஏமாற்றி எதையும் பெற்றுக் கொள்ள முடியாது, மாறாக ஒருவர் மற்றவருக்காக வாழ்வதன் மூலமே இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

"கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாக இருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாக கருதவில்லை. ஆனால், தம்மை வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்கு கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்." பிலி 2: 6-9. பவுலடிகளார் சொல்லும் இந்த விவிலிய வார்த்தையே ஆண்டவர் இயேசுவின் வாழ்வாகும். இந்த உண்மையையே பல புனிதர்கள் தங்கள் வாழ்வில் கடைப்பிடித்து அதையே கிறிஸ்தவ விழுமியமாக நமக்கும் கற்பித்துள்ளனர். இந்தத் தாழ்ச்சியே மகிழ்வுக்கு ஒரு முதல்படி. ஏனென்றால், தாழ்ச்சி உறவை வலுப்படுத்தும், தாழ்ச்சி ஒருவர் மற்றவருக்குள் ஒரு இணக்கத்தையும் அதன் மூலம் ஒருவர் மீதுள்ள மரியாதையை மேம்படுத்தும். இங்கே நீயா நானா என்னும் வாக்குவாதம் இல்லை, மாறாக ஒருவர் மற்றவரை மதிக்கும் உன்னத நிலை உள்ளது.



அன்பார்ந்தவர்களே, நானா, நீயா என்ற மனநிலையில் நாம் மாறி மாறி ஒருவர் மற்றவரை காயப்படுத்திக் கொண்டிருப்போமே தவிர ஒரு இணக்கமோ உறவுப் பாலமோ ஏற்பட வாய்ப்பே இல்லை. ஒருவர் மற்றவரை மதிப்பதற்குப்பதில் மிதித்துக்கொண்டிருப்போம். நான் பெரியவன் என்று காட்ட நான் முயற்சித்தால் மற்றவன் தன்னைப் பெரியவன் என்று நிரூபிக்க முயன்றுகொண்டிருப்பான். இது தேவையற்ற மன வேதனைகளையும் குழப்பங்களையும் சாதகமற்ற சூழ்நிலைகளையும் உருவாக்குமே தவிர வேறொன்றையும் தராது. ஆனால், பல வேளைகளில் நாம் இதையே நன்மை என்று நம்புகிறோம். இந்த தவறான நம்பிக்கையாகிய மாயையே நம் துன்பத்தின் காரணமாக அமைந்துவிடுகின்றது.

இன்று இதுபோன்ற தவறான நம்பிக்கைகளை நம் மனதில் இருந்து களைய வேண்டும். இதுபோன்று நாம் கொண்டுள்ள இன்னும் சில தவறான நம்பிக்கைகளை நல்ல நம்பிக்கைகள் கொண்டு மாற்றும் செய்தியோடு மீண்டும் உங்களை அடுத்த இதழில் சந்திக்கும் வரை நன்றிகூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக ஊடகங்கள் வழி நற்செய்தி அறிவிப்பை மேற்கொள்வது தமிழ் மறைமாவட்டங்களின் இன்றைய காலத்தின் தேவையாகும்

அருள்திரு கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக வருகை விரிவுரையாளர் இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

ஒக்டோபர் மாதம் 18ஆம் திகதி மறைபரப்பு உலக நாள் கொண்டாடப்படுவது அனைவரும் அறிந்ததே. 2020ஆம் ஆண்டு திருகோணமலை மறைமாவட்டத்தில் நற்செய்தி மீள் அறிவிப்பு ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்ட்டுள்ள நிலையில் அம்மறைமாவட்ட கத்தோலிக்க ஏடான திருமலைத் தீபத்தின் ஆசிரியர் டக்ளஸ் ஜேம்ஸ் அடிகளாரின் அழைப்பின் பேரில் சமூக ஊடகங்கள் வழி நற்செய்தி அறிவிப்பை மேற்கொள்வது தமிழ் மறைமாவட்டங்களின் இன்றைய காலத்தின் தேவையாகும் என்ற தலைப்பிலான இவ்வாக்கத்தை வரைகிறேன்.

யாழ் மறைமாவட்டம் - மன்னார் மறைமாவட்டம் மற்றும் திருமலை மட்டுநகர் மறைமாவட்டங்கள் (மட்டக்களப்பு மறைமாவட்டம் அப்போது தனியாக பிரிக்கப்படவில்லை) இணைந்து 2012ஆம் ஆண்டை எல்லோருக்கும் மறைக்கல்வி எனும் கருப்பொருளில் மறைக்கல்வி ஆண்டாக பிரகடனப்படுத்தின என்பது முதலில் இங்கு நோக்கப்பட வேண்டியதாகும். இது போன்று இன்றைய நான்கு தமிழ் மறைமாவட்டங்களும் இணைந்து ஆண்டுகளுக்கான கருப்பொருட்களை ஒன்றாகத் திட்டமிட்டு ஒரே கருப்பொருளை எடுத்து செயற்படுவது அதிக பயன்தரும். விடயங்களை இலகுவாக்கும். நான்கு தமிழ் மறைமாவட்டங்களும் இணைந்த ஒரு தனி அலகாகச் செயற்பட வழி வகுக்கும் என்பதை சிந்திப்பது சிறந்தது.



எம் முன்னோரின் அர்ப்பணம் மிக்க கத்தோலிக்க வாழ்வால் பரம்பரை பரம்பரையாக கத்தோலிக்க விசுவாசத்தைப் பெற்று கத்தோலிக்க வாழ்வு வாழ்ந்து வரும் நாம் எமது கத்தோலிக்க வாழ்வை என்றும் புடமிட்டுக் கொள்வதும் புதுப்பித்துக் கொள்வதும் அடிப்படையில் தேவையான தொன்றாகும்.

**எமது நாடுகளுக்கு வந்த வெள்ளைக்கார சுவாமிமார்**

தேவை எங்கோ சேவை அங்கே என்ற நோக்குடன் மறைபரப்புப் பணியாளர்களாகக் கடல் கடந்த பயணம் மேற்கொண்டு எமது நாடுகளுக்கு வந்த வெள்ளைக்கார சுவாமிமார் தம் தாய் தந்தை - உற்றார் உறவினர் - சுற்றம் சூழல் - சொந்த வீடு - தாய் நாடு என அனைத்தையும் துறந்து முன்பின் தெரியாத புதிய பணிக்களம் நோக்கி வந்தனர். புதிய மண் - புதிய மக்கள் - புதிய மொழி - புதிய கலாசாரம் - புதிய காலநிலை - புதிய உணவு - புதிய வாழ்க்கை முறை என அனைத்துமே புதியதாய் அமைந்த போதும் அர்ப்பணிப்பு மிக்க பணியை ஆற்றினர். வளங்களும் வசதிகளும் உள்ள பூமியில் இருந்து அடிப்படை வசதிகளே அற்ற ஒரு பூமிக்கு வந்து அவர்கள் வாழ்ந்த தியாக வாழ்வும் - கிறிஸ்தவத்திற்குச் சான்று பகரும் அர்ப்பண வாழ்வும் - பேசிய கொச்சைத் தமிழும் வீதியில் அவர்களைக் கண்டாலும் முழங்காலில் இருந்து சுவாமி இயேசுக்கிறிஸ்துவைத் துதிக்க என வணக்கம் செலுத்த வைத்தது. அன்னியர்களான அவர்களை அன்பு செய்ய வைத்தது. அவர்கள் பேசிய அந்த கொஞ்சும் தமிழை பேசிக்காட்டவும் வைத்தது. அவர்கள் இறந்து போன போது இந்த மண்ணே தம் சொந்த மண் என இங்கேயே புதைக்கப்பட்ட போது கத்தோலிக்கத்திற்கும் துறவறத்திற்கும் அர்ப்பணத்திற்கும் அவர்கள் ஆழ்ந்த அர்த்தம் கொடுத்தார்கள். இது எம் விசுவாச வாழ்வை ஆழப்படுத்த வைத்தது.

இன்று காலம் மாறி மேலைத்தேய நாடுகளில் அழைத்தல்கள் குறைந்து குருக்களுக்கான தேவைகள் அதிகரித்து ஆலயங்கள் மூடப்படும் நிலை ஏற்படும் நிலையில் எமது குருக்கள் பலர் அங்கு சென்று நற்செய்தி அறிவிப்புப் பணியில் ஈடுபட்டு தம் தியாகமிக்க பணியாலும் அர்ப்பண வாழ்வாலும் கத்தோலிக்கத்திற்கு சான்று பகர்கிறார்கள்.

இன்று எமது நாடுகள் கத்தோலிக்க வாழ்விற்கும் பணிக்கும் எதிராக எதிர்நோக்கும் சவால்கள் மத்தியில் எவ்வாறு கத்தோலிக் நற்செய்தி அறிவிப்புப்பணி மீள்அறிவிப்புச் செய்யப்படலாம் என்பது நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஊடகத்துறையை குறிப்பாக சமூகவலைத்தளங்களை எப்படி நற்செய்தி அறிவிப்புப்பணிக்கு பயன்படுத்தலாம் - எப்படி பயன்படுத்த வேண்டும் என்பது பற்றி மறைக் கல்வியில் ஊடகத்தின் பயன்பாடு என்ற தலைப்பில் இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவை இந்தியாவில் சிலகாலத்திற்கு முன்னர் தேசிய மறைக்கல்விக் கருத்தரங்கை நடத்தியது.

சமூக ஊடகங்கள் வழி நற்செய்தி அறிவிப்பை நவீன மயப்படுத்தவேண்டும் என்பது தமிழ் மறைமாவட்டங்களின் இன்றைய காலத்தின் தேவையாகும் என்பதை இங்கு நோக்குவோம்.

**இன்றைய நவீன தொடர்பு முறைகளில் சமூக வலைத்தளங்களின் பாவிப்பு**

இன்றைய சமுதாயத்தில் குறிப்பாக வளர்ந்த இளைஞர்கள் மாணவர்கள் மற்றும் வளரும் சிறியோர் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவரும் சமூக ஊடகங்களை எவ்வாறு நற்செய்தி மற்றும் மறைக்கல்வி அறிவிப்பிற்கு பயன்படுத்தலாம் என்பது பற்றிய சிந்தனை முக்கியத்துவம் பெறவேண்டும்.

இணையத்தினதும் வலையமைப்பினதும் வருகை நினைக்கமுடியாத பல விடயங்களை நிஜமாக்கியுள்ளது. கடந்த ஒரு தசாப்த காலத்தினுள் ஊடகமானது சமூக ஊடகங்களின் வழி வேகத்தையும் பாரிய மாற்றத்தையும் கண்டுள்ளது. குறிப்பாக புளொக்ஸ் - பேஸ்புக் (முகநூல்) - வலைப்பின்னல் - ருவிற்றர் - யூரியூப் - பிளிக்கர் - வைபர் - மெசெஞ்சர் போன்ற சமூக ஊடகங்களின் வருகை பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.இன்னும் புதிய சமூக வலைத்தளங்கள் உருவாகிவர சில பின்தள்ளப்பட்டும் சில முன்னிடம் பெற்றும் வருகின்றன.

உண்மையில் 90களின் இறுதியில் எச்.ரி.எம்.எல். எனப்படுகின்ற இணைய மொழியை கற்றுக்கொள்ளாமலே யாரும் புளொக்குகளையும் இணையத்தளங்களையும் சொந்தமாக வைத்துக்கொள்ள முடியும். அவற்றை சிறந்த விதமாக இயக்க முடியும் என்பதோடு அவை இலவசமாக கிடைக்கும் என்ற நிலையும் தோன்றியது. இதுவே பாரம்பரிய ஊடகங்களான அச்சு மற்றும் மின் ஊடகங்களை சவாலுக்குட்படுத்தி சமூக ஊடகங்களை அனைவருக்கும் திறந்து விட்டு அனைவரும் அதில் தம் கைவரிசையைக் காட்டக்கூடிய ஒரு புதிய யுகத்தை அறிமுகப்படுத்தியது எனலாம்

ஆங்கில மொழி மூலமான மறைக்கல்வி மற்றும் நற்செய்தி அறிவிப்பு இணையத்தில் பாரிய வளர்ச்சிகண்டுள்ள நிலையில் தமிழ் மொழி மூலமான மறைக்கல்வி அறிவிப்பு குறிப்பாக இலங்கை தமிழ் மறைமாவட்டங்களிடையே வளர்ச்சி பெறவில்லை என்றே கூறவேண்டும்.

சமூக ஊடகங்களை பாவிப்பதும் பயன்படுத்துவதும் இலகுவானது. ஒரு குறிப்பிட்ட எல்லை வரை இலவசமானது. இவ்வசதியையும் பெரும் வாய்ப்பையும் ஏன் நாம் இன்னும் பயன்படுத்தவில்லை என்பது ஒரு பெரிய கேள்வியாகும். சம்பந்தப்பட்டவர்கள் இதில் கூடிய கவனம் செலுத்தவும் தேவையான பயிற்சிகளைப் பெற்று போதுமான வசதிகளை செய்து இந்த பாரிய சவாலை ஏற்று விரைவாக செயல்படுத்த வேண்டும்.

**கத்தோலிக்க திருச்சபை திருஅவையின் நவீன ஊடக பாவிப்பு**

உலகலாவிய ரீதியில் நோக்குகின்றபோது இந்த மாற்றங்களை கத்தோலிக்க திருச்சபையும் தன்னுடையதாக்கி இந்த ஊடகங்களின் வேக வளர்ச்சிக்கு தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வந்திருக்கின்றது என்றே கூறவேண்டும்.

உலக கத்தோலிக்க திருச்சபைச் சரித்திரத்தில் ஓய்வு நிலை திருத்தந்தை என்பதையும் இணையத்தால் அதிக காலம் திருத்தந்தையாக வாழ்ந்தவர் என நோக்கப்படும் 16ஆம் பெனடிக்ற் அவர்கள் தமது பணிக்காலத்தில் ஊடகத்தினை இன்னும் குறிப்பாக சமூக ஊடகங்களை தமது சமயப் பணிகளில் பெரிதும் பயன்படுத்தினார். திருத்தந்தை 16ஆம் பெனடிற் அவர்கள் சமூக ஊடகங்களையும் அவற்றின் பாவிப்பையும் பெரிதும் விரும்பி ஊடகங்கள் வழியாக ஒரு இணையற்ற தொடர்பாடலை ஏற்படுத்த முடியும் - அது கத்தோலிக்கத்தின் உள்ளக உறவையும் வெளி உலகத்துடனான தொடர்பையும் ஏனைய திருஅவையின் செயற்பாடுகளையும் வளர்க்க உதவும் என நம்பினார். அதனை




"நகைப்பிலும் துயரம் உண்டு; மகிழ்ச்சியை அடுத்து வருத்தமும் உண்டு" (நீ. மொ– 14:13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுத்தி வெற்றியும் கண்டார்.

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் அவர்கள் தமது குருத்துவத்தின் 60ஆவது ஆண்டு நிறைவு தினத்தில் புனித இராயப்பர் சின்னப்பர் பெருவிழாவில் வத்திக்கானின் உத்தியோகபூர்வ செய்தி நிறுவனமான நியூஸ் வத்திக்கானை ருவிற்றர் எனும் சமூக வலையமைபப்பில் உத்தியோகபூர்வமாக தொடக்கிவைத்தார். எனது அன்பான நண்பர்களே வத்திக்கான் செய்தி நிறுவனத்தை ஆரம்பித்து வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஆண்டவர் இயேசு புகழப்படுவாராக. எனது செபங்களும் ஆசீரும் உங்கள் மேல் நிறைய வந்து தங்குவதாக என்ற செய்தியை சமூக வலையமைப்பான ருவிற்றரில் ஐபாட் மூலமாக உலகிற்கு வெளியிட்டார்.
07 டிசம்பர் 2011அன்று திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் பாப்பரசர் உலகின் மிகப்பெரிய கிறிஸ்மஸ் மரத்தினை தமது வத்திக்கான் வாசஸ்தலத்தில் இருந்தபடியே நவீன தொழிநுட்ப சாதனமான ஐபாட்டை தொட்டு கிறிஸ்மஸ் மர மின் விளக்குகளை ஒளிரச் செய்துள்ளார்.

வத்திக்கான் கத்தோலிக்க செய்திகளையும் காணொளிகளையும் யூ ரியூப்பில் ஆங்கிலம் இத்தாலியம் ஆகிய மொழிகளில் வெளியிட்டு வந்த நிலையில் பிரெஞ் மொழியிலும் செய்தி சேவையை ஆரம்பித்து வத்திக்கான் செய்திகளை வெளியிட ஒழுங்குகளை மேற்கொண்டார். திருத்தந்தை பிரான்சீஸ் அவர்களும் இந்த முயற்சியில் பின்நிற்கவில்லை. எங்கெங்கெல்லாம் திருச்சபையின் வளர்ச்சிக்கும் செயற்பாட்டிற்கும் நவீன ஊடகங்களை பயன்படுத்தலாம். பயன்படுத்த முடியும் என்பதை கற்றறிந்து செயற்பட அனுமதி வழங்கியுள்ளார்.

**சமூக ஊடகங்களை எவ்வாறு மறைக்கல்வி மற்றும் நற்செய்தி அறிவிப்புப் பணிக்குப் பயன்படுத்தலாம்?**

மறைக்கல்வி அறிவிப்பிற்கு சமூக ஊடகங்களான புளொகஸ் - பேஸ்புக் (முகநூல்) - யூரியூப் - பிளிக்கர் - ருவிற்றர் போன்றவற்றை பயன்படுத்த முடியும். புளொக்ஸ்சுகளை யாரும் இலவசமாக இணையத்தில் ஆரம்பிக்க முடியும். புளொக்ஸ்சுகளை எவ்வாறு இயக்குவது என்பதை மிக இலகுவாக இணையத்திலேயே கற்றறிந்து கொள்ள முடியும்.

இணையத்தளங்கள் கூட இன்று இலவசமாக குறிப்பிட்ட வசதிகளுடன் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. மேலதிக வசதிகளைப் பெற்றுக்கொள்ளவே பணம் செலுத்த வேண்டியுள்ளது. இந்த நவீன தொழில்நுட்பத்தை மறைக்கல்வி மற்றும் நற்செய்தி அறிவிப்புப் பணிக்குச் சிறப்பாக பயன்படுத்த முடியும்.

இன்று இளைஞர்கள் மத்தியில் நினைத்துப்பார்க்க முடியாத அளவிற்கு பிரபல்யமடைந்துள்ள பேஸ்புக் (முகநூல்) வழி மறைக்கல்வி மற்றும் நற்செய்தி அறிவிப்பை மிகவும் சிறந்த விதமாக ஆற்றமுடியும். இவ்விடயத்தில் எமது தமிழ் மறைமாவட்டங்கள் எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை என்றே கூறவேண்டும். இலகுவாக இலவசமாக கிடைக்கின்ற குறிப்பாக இளைய சமுதாயத்தை வெகுவாகக் கவருகின்ற இந்த முகநூல் வழி இளைஞர்களையும் மறைக்கல்வி மாணவர்களையும் கவர முடியும்.

பங்குகளிலே இருக்கின்ற மறைக்கல்வி மாணவர்களுக்கென ஒவ்வொரு பங்கிலும் ஒரு முகநூலை ஆரம்பித்து அதனை பங்குகளுக்கிடையில் இணைத்துவிட்டு அவர்கள் தமக்கிடையே விடயங்களைப் பகிர்நதுகொள்ளவும் - செய்திகளைத் தெரிவிக்கவும் - மறைக்கல்வி அறிவினை வளர்க்கின்ற விதமாக எழுத்தாக்கங்கள் - படம் வரைதல் போன்ற போட்டிகளை நடத்தவும் மேலும் புகைப்படங்களை பகிர்தல் - குறிப்புக்களை வரைதல் போன்ற பல செயல்பாடுகளை ஆற்ற முடியும். முகநூல் இளைஞர்கள் மத்தியில் பெரும் செல்வாக்கு செலுத்துகின்ற படியால் அதனை மறைக்கல்வி படிக்கின்ற மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி அதன்வழி பாரிய மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

**இலவசமாக உருவாக்கக்கூடிய இணையத்தளங்களைப் பங்குகள் தோறும் உருவாக்கல்**

இலவசமாக உருவாக்கக்கூடிய இணையத்தளங்களைக் கூட பங்குகள்தோறும் உருவாக்கி அங்கு மறைக்கல்வி வகுப்புக்கள் பற்றிய விபரங்கள் - மறைக்கல்வி பரீட்சை முடிவுகள் - மறைக்கல்வி துணுக்குகள் - நிகழ்வுகளின் படங்கள் போன்ற பலவற்றை பகிர்ந்து கொள்ள முடியும். மறைக்கல்வி மாணவர் அனைவரின் புகைப்படங்களைக் கூட அங்கு இணைத்து விடலாம். இது அவர்களுக்கு அச்செயற்பாட்டில் ஈடுபட பெரு விருப்பைக் கொடுக்கும்.

மறைக்கல்வி அறிவைப் புகட்ட தயாரிக்கப்பட்ட மறைக்கல்வி அறிவுசார்ந்த நூல்களை இந்த மறைக்கல்வி இணையத்தளத்தில் அல்லது புளொக்கில் இணைத்துவிட்டால் இறைமக்கள் அவற்றை தாமாகவே சென்று பார்க்கவும் படிக்கவும் பயன்பெறவும் முடியும்.

**யூரியூப் என்பது காணொளிகளையும் படங்களையும் பார்க்கின்ற ஒரு தளமாகும்**

யூரியூப் என்பது காணொளிகளையும் படங்களையும் பார்க்கின்ற ஒரு தளமாகும். இங்கு கூட இலவசமாக இணைப்பினைத் தொடங்கி குறும்படங்களையும் பங்கு மறைக்கல்வி நிகழ்வுகளையும் காணொளிகளாக்கி தரவேற்றம் செய்யலாம். குறும்படப் போட்டிகளை நடத்தி அவற்றை இங்கு தரவேற்றம் செய்யலாம். அது காலாகாலமாக இணையத்தில் இருக்கப்போகிறது. உலகம் முழுவதிலும் உள்ளோரால் பாாக்கப்படப்போகிறது என்பது பாரிய பலமாகும்.

விரும்புகின்ற போது யூரியூப்பில் தரவேற்றம் செய்யப்படும் காணொளிகளுக்கான போட்டிகளைக் கூட நடத்த முடியும். இதனால் மறைக்கல்வி மாணவர்களும் வளர்ந்தவர்களும் இணையத்தளத்தினுள் வரவும் இவற்றைப் பார்க்கவும் இதுபோன்ற காணொளிகளைத் தயாரிக்கவும் ஆர்வமூட்டப்படலாம்.

இணையத்தில் நேரத்தை வீண் விரயமாக்கவும் தேவையற்ற விடயங்களில் ஈடுபட்டு குழப்பத்தை ஏற்படுத்தவும் தவறான பாதைகளுக்குச் செல்லவும் முற்படுகின்றவர்களுக்கு இது ஒரு பொழுது போக்காகவும் அதேவேளை அறிவூட்டலாகவும் அமையுமென்பதில் ஐயமில்லை.

**பிளிக்கர் என்கின்ற தளமானது தரமான சிறந்த புகைப்படங்களை இலவசமாக தரவேற்றும் ஒரு தளமாகும்**

பிளிக்கர் என்கின்ற தளமானது தரமான சிறந்த புகைப்படங்களை இலவசமாக தரவேற்றும் ஒரு தளமாகும். இது இலகுவானது. இலவசமானது. ஆனால் சில விதிமுறைகள் கண்டிப்பாக கடைப்பிடிக்கப்பட வேண்டும். மறைக்கல்வி சார்ந்த சிறந்த புகைப்படங்களையும் ஆலயங்களில் நடைபெறும் மறைக்கல்வி நிகழ்வுகள் மற்ற விடயங்களைக் கூட இதில் தரவேற்றம் செய்யலாம்.

சமூக ஊடகங்கள் பாரிய தாக்கத்தை சமுதாயத்திலும் குறிப்பாக இளைஞர் மத்தியிலும் ஏற்படுத்த வல்லன. பழைய பாரம்பரிய பயிற்சி முறைகளையும் செபங்களைப் பாடமாக்கும் முறைகளையும் விட்டு விடாமல் அத்தோடு புதிய பாணியில் வேகமாக அதேவேளை அனைவரையும் கவரத்தக்க விதமாக நவீன தொழில்நுட்பத்தின் வழி மறைக்கல்வி அறிவிப்பை காலத்திற்கேற்றவாறு மாற்றி அமைத்துக்கொண்டு செல்வது இன்றைய காலத்தின் கட்டாய தேவையாகும்.

இதற்கு போதுமான அளவு அடிப்படை அறிவு புகட்டப்படவேண்டும். குறிப்பாக ஊடகங்களின் செயல்பாடு சமூக ஊடகங்களின் நிலை அவற்றை இயக்குகின்ற விதம் என்பன பற்றிய அறிவு புகட்டப் படவேண்டும். இவற்றை பெறுவதற்கான இணைய இணைப்பு வசதிகள் செய்யப்பட வேண்டும். கணினி - டொங்கிள் - வைபை போன்ற உபகரணங்கள் பெறப்பட்டு இணைய இணைப்பு மற்றும் வசதிகள் செய்யப்பட வேண்டும். இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால் இதில் பங்கு பற்றுவோர் எப்படிச் செயற்படுகிறார்கள் - எந்த விதமாக இந்த வசதிகளை பயன்படுத்துகிறார்கள் என்பதைக் கண்காணிப்பதாகும். தேவையற்ற சில இணையத் தளங்களுக்கு இவர்கள் செல்லாதவாறு தொழில் நுட்பம் மூலம் தடைப்படுத்தி வைக்கவும் முடியும்.

இந்த முயற்சி உடனடியாக முழுமையாக செயற்படுத்தப்பட முடியாது என்பது உண்மைதான். ஆனால் இப்போதே மெதுமெதுவாக ஆரம்பிக்கப்படலாம்.

புலம் பெயர்நாடுகளில் தமிழ் கத்தோலிக்க ஆன்மீக பணியகங்கள் இந்த முயற்சியில் முன்நிற்கின்றன. அவர்களின் இந்த முயற்சிகளை பின்பற்றுவதோடு அவர்களோடும் இந்த பணியில் இணைப்பை ஏற்படுத்தலாம்.

இவற்றையெல்லம் செய்து மாணவர்களையும் மறை ஆசிரியர்களையும் உரியவிதமாக நெறிப்படுத்தினால் சமூக ஊடகங்கள் வழி மறைக்கல்வி மற்றும் நற்செய்தி அறிவிப்பைப் போதிப்பது தமிழ் மறைமாவட்டங்களின் இன்றைய காலத்தின் தேவையாகும் என்பது நிஜமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவில் பிச்சைக்காரன்

## முதல் பரிசு பெறும் குறுங்கதை

உருக்குமலை எனும் கிராமத்திலே புகழ்பெற்ற ஒரு கோவில் இருந்தது. அங்கே கடவுள் வடிவில் கிருஷ்ணன் எழுந்தருளி இருக்கிறான். அவனுடைய திருத்தரிசனத்தை நாடாதோர் நாற்றிசையிலும் எண் திக்கிலுமில்லை. அக்கோவிலிலே எந்நேரம் சென்றாலும் இரண்டு விடயங்களுக்கு குறைவே இருக்காது. ஒன்று அலை மோதும் பக்தர் கூட்டம். மற்றுமொன்று பிச்சைக்காரர்கள் கூட்டம். நாளொரு திங்கள் முதலாமவர் கூடினும் குறையினும் இரண்டாமவர் நளொரு வேகமும் பொழுதொரு வண்ணமுமாய் அதிகரித்தபடியே இருப்பதன் அதிசயம் அறிய நாடவேண்டியது கடவுளைத் தான். இவ்விரு தரப்பினருக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளுள் ஒன்று, முதல் தரப்பினர் உள்ளேயும், மற்றவர் வெளியேயும் பிச்சை கேட்பது தான் ஒற்றுமை. இருவருள்ளும் ஒருவர் பெற்றுக் கொள்கிறார் மற்றவர் தவறவிடுகிறான். இவ்இரண்டாம் தரப்பைச் சேர்ந்தவன் ஒருவனே காலன் அவன் தன்னுடைய அன்பொழுகும் வார்த்தைகளால் அனைத்து பிச்சைக்காரரிடமிருந்தும் வேறுபட்டிருந்தான். அவனுக்கு குடும்பம் குட்டி இல்லை. தனிக்கட்டை தான் வயது 35 ஐத் தாண்டியிருக்கும். காலொன்று பழுது. அவன் ஒரு நாள் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான் 1000 ரூபாய் தாளொன்று பல் இழித்தபடி தன் தட்டிற்குள் வந்தமர்வதைக் கண்ட அவனுக்கு மகிழ்ச்சி பொங்கி வழிந்தது. ஆனால் அவன் மனதுக்குள் ஒரு கணயோசனை இந்தப் பணத்தை வைத்து நான் என்ன செய்வது? ஏழையென்பவன் யாதுமற்றவனன்றோ!



அவ்வாறிருக்க, இப்பணத்தை இன்றே என்னால் செலவு செய்ய முடியாமற் போகுமானால் நாளைக்கு என்று ஒன்று என்னிடம் வந்துவிடுமே! அன்றன்றைக்குரிய துன்பம் அன்றன்றைக்கே போதுமாயிருக்கையில் இதை எப்படி நாள் முழுவதும் பாதுகாப்பது எனும் சஞ்சலத்தோடு என்னுடைய 35 வருட நாளை பற்றிய கவலையற்ற தூக்கத்தை தொலைக்க வேண்டுமா? இல்லையே! என முடிவு செய்த அவனுக்கு இப்பணத்தை என்ன செய்வது என்பதே யோசனை தீர்க்கமான முடிவெடுத்தவனாக கோவிலுக்குள் நொண்டியபடி சென்றான். கடவுளைப் பார்த்து, கிருஷ்ணா! ஆணவமலத்தை அழிப்பவனே! உன்னுடைய திருக்கரத்தில் ஏந்தியுள்ள சக்கரம் கொண்டு இப்பணத்தால் வரப்போகும் பேரிடரான ஆணவத்தை அழிப்பாயாக! எனக் கூறி 1000 ரூபா தாளை உண்டியலுக்குள் போட்டான். அவனைச் சூழயிருந்த அனைத்தும் மறைந்து போயின நிர்மலமான வானமும், குறைவில்லாத பேரொளியும் மட்டுமே அவனைச் சூழ்ந்திருந்தன.

ஓர் அசரீரி; காலா! உன் ஞானத்தால் என்னை கவர்ந்தாய். எல்லா ஆன்மாக்களும் என்னிடம் யாசகம் கேட்டு நான் எழுந்தருளியிருக்கிற பதிகளுக்கு வருகின்றனர். அவர்கள் கேட்பதை நான் தருவேன் என்றும் கூறாமல் தரமாட்டேன் என்றும் கூறாமல் மௌனம் சாதிக்கிறேன். எவனொருவனது தேவை நல்லதோ அது அவனிடத்தில் நிலைத்து வருவதால் கிடைக்கும் என்னும் நம்பிக்கை அவனிடத்திலே உண்டாகிறது. அப்போது தான் அவனும் அதனைப் பெற்றுக் கொள்கிறான். ஆனால் தீமையானதை நாடுபவனின் எண்ணமானது அவனது கோபம், வஞ்சகம், திமிர்வாதம் என்பவை அழிந்து போகிற போது தானும் சேர்ந்து அழிந்து போகிறது. அவ்வெண்ணம் அழிந்த பின் அத்தீயது அவனுக்கு தேவைப்படாது போகிறது. ஆகவே தேவைப்படாத ஒன்றை நானும் அவனுக்கு வழங்குவதில்லை. இதனாலேயே நான் கேட்டவுடன் பதிலளிக்காது மௌனம் சாதிக்கின்றேன். ஆனால் நீயோ மௌனம் சாதிக்கிற என்னிடம் கேட்காமல் படியருகே அமர்ந்து கேட்கவேண்டியவர்களிடம் கேட்பதனால் உட்டனே பெற்றுக் கொள்கின்றாய்.

இவ்வாறு என்னிடம் பிச்சைகேட்டு வருபவர்களிடமிருந்தே பிச்சை பெற்றுக்கொள்ளும் நீ பலே கில்லாடி! ஆனால் உலக ஆன்மாக்களுக்கு எல்லாம் பிச்சையிடுபவனான எனக்கே. உன்னுடைய நிர்மலமான ஞானம் பிச்சையிட்டுள்ளது. இப்போது நான் ஏழையாகிவிட்டேன் என்று கூறி மறைந்தது. மீண்டும் கோவிலுக்குள் நிற்பதாக அவன் உணர்ந்தான். ஆனால் அது அக்கோவிலல்ல புதிய வானமும் புதிய பூமியும் உண்டாக்கப்பட்டிருந்தன. அங்கு சூரியனுமில்லை சந்திரனுமில்லை கடவுளே அவ்விடத்தின் ஒளி!

"ஏழைகளின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்
ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது!"

# தீபத்தின் ஒளியில்

பதில்கள்: அருட்பணி. இ. யூட் சர்வானந்தன் அடிகளார்
இயக்குனர், திருவழிபாட்டு ஆணையம்

**கேள்விகள் : S. கௌசல்யா**

**Q1. ஆலயத்தில் காணப்படும் பொருட்கள் புனிதமானவையா?**
திருவழிபாட்டில் பயன்படுத்தப்படும் பொருட்கள் யாவும் புனிதமானவையே திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் ஆலயமும் புனிதமானதே.

**Q2. ஆலயங்களில் பாதணி அணிவது பற்றி?**
ஆலயங்களில் பாதணி அணிவது பற்றி திருஅவையின் எவ்வித விளக்கங்களும் கிடையாது. இந்த விடயம் கூடுதலாக பேசப்படுவது ஆசிய கலாச்சாரத்திலேயே. பொதுவாக ஆசியாவில் வழிபாட்டுத் தலங்களுக்கு செல்ல முன் பாதணிகளை கழற்றுவது வழமையான விடயம். இறைமக்கள் விரும்பினால் பாதணிகளுடனும் செல்லலாம், பாதணி இல்லாமலும் செல்லலாம். இவ்வழக்கத்திற்கும் விவிலியத்துக்கும் முடிச்சு போட முடியாது.

விடுதலைப் பயணத்தில் 3:5 கூறும் "உன் பாதங்களிலிருந்து மிதியடிகளை அகற்றிவிடு" என்பது விவிலிய விளக்கத்தில் மிக ஆழமானது. மிதியடிகள் பதவி, பட்டம், ஆடம்பரம் என்பவற்றை குறிக்கின்றது. எனவே இறைவன் இவை அனைத்தையும் துறந்து புதிய மனிதனாக காலடி எடுத்து வைக்குமாறு கூறுகின்றார். இவற்றுடன் இறைவனின் புனிதமான இடத்தில் நுழைய முடியாது. இதுவே உண்மையான விவிலிய விளக்கமாகும். எனவே இவ் வார்த்தைக்கும் ஆலயத்தில் பாதணிகள் அணிவதற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

**Q3. புதிய ஏற்பாட்டில் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து மோசேக்கு கடவுள் கொடுத்த 10 கட்டளையை "அன்பு"என மாற்றியதைத் தவிர வேறு எந்தக் கட்டளைகளையும் மாற்றியதுண்டா?**
இயேசு எக்கட்டளையையும் மாற்றியமைக்கவில்லை. மத்தேயு 5:17 கூறுகின்றது திருச்சட்டத்தையோ இறைவாக்கையோ நான் அழிக்க வந்தேன் என நீங்கள் என்ன வேண்டாம் அவற்றை அழிப்பதற்கல்ல நிறைவேற்றுவதற்கே வந்தேன். எனவே புதிய ஏற்பாட்டில் பழைய ஏற்பாடு நிறைவு பெற்றது.

**Q4. இயேசு விருத்தசேதனம் செய்து கொண்டுள்ளார் என்றால் ஏன் கிறிஸ்தவர்கள் அதைக் கடைப்பிடிப்பதில்லை?**
விருத்தசேதனம் செய்து கொள்வது யூதர்களின் முக்கியமான நிகழ்வு. இது இறைவனால் கட்டளையிடப்பட்டது. எல்லா யூதர்களும் இக்கடமையை நிறைவேற்ற வேண்டும். இயேசு ஓர் யூதனாக இருந்ததால் அவரும் விருத்தசேதனம் செய்து கொண்டார்.

ஆனால் இயேசுவை நம்பிக்கையில் பின்பற்றும் கிறிஸ்தவர்கள் விருத்தசேதனம் செய்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் நாம் இயேசுவை பின்பற்றுகின்றோம். ஆனால் யூத மதத்தைப் பின்பற்றுவதில்லை. இப் பிரச்சனை கி.பி 50 களிலே தீர்க்கப்பட்டு விட்டது. எருசலேம் சங்கத்தின் தீர்மானத்தின் படி இன்றியமையாதவற்றைத் தவிர அதிகமான வேறு எந்தச் சுமையையும் உங்கள் மேல் சுமத்தக்கூடாது என்று தூய ஆவியாரும் நாங்களும் தீர்மானித்தோம். (தி.பணி 15:28) ஏனெனில் யூதர்கள் பிறஇனத்தவரும் விருத்தசேதனம் செய்து கொள்ள வேண்டும் என நச்சரித்தனர். இதற்காகவே இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

எனவே விருத்தசேதனம் கிறிஸ்தவர்களுக்கு அவசியமானது ஒன்று அல்ல, மாறாக இயேசு கிறிஸ்துவிடம் கொள்ளும் நம்பிக்கையே அவசியமானதாகும். இதுவே நாம் பெற்றுக் கொள்ளும் திருமுழுக்கு (கலா 5:20 - 29)

**கேள்வி : S. இலக்ஷன்**

**Q5. சிலை வழிபாடு என்றால் என்ன? கத்தோலிக்க திருச்சபை சிலை வழிபாடு செய்கின்றதா?**
இறைவனுக்கு இணையாக எவற்றையெல்லாம் வழிபடுகின்றோமோ அவை அனைத்துமே சிலைவழிபாடு ஆகும்.

திருஅவையில் மூவொரு இறைவனுக்கு மாத்திரம் ஆராதனையும் வழிபாடும் செய்கின்றோம். அடுத்ததாக புனித மரியாளுக்கு அதிஉயர் மரியாதை செலுத்துகின்றோம். அதன் பின் மற்றைய புனிதர்களுக்கு மரியாதை செலுத்துகின்றோம்.

கத்தோலிக்க திருச்சபையில் சிலை வழிபாடு என்பது இல்லை. எவ்வித சுரூபங்களையும் நாம் வழிபடுவது இல்லை இயேசுவின் உருவங்கள், வானதூதர்கள் மற்றும் புனிதர்களின் உருவங்கள் அவர்களுடைய உருவமாக நாம் கருத வேண்டும். அவை புனிதப் படுத்தப்படும் போது அதிலே தெய்வீக வல்லமை நிறைந்து தங்கி அதிலிருந்து தெய்வீகம் வெளிப்படுகின்றது. இதனால் புனிதப்படுத்தப்பட்ட திருச்சொரூபங்களைத் தொட்டு முத்தமிடலாம், அவற்றுக்கு முன்பாக ஜெபிக்கலாம்.

தொடரும் ...

"மனஅமைதி உடல்நலம் தரும்; சினவெறியோ எலும்புருக்கியாக்கும்" (நீ. மொ- 14:30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறையும் மறை

● வணக்கத்திற்குரிய வாசகப் பெருமக்களே!
நன்கு பரீட்சயமான ஒரு கதையோடு ஆரம்பிக்கின்றேன்.
ஒரு கத்தோலிக்க தேவாலயம் திருப்பலி நிறைவேற்ற முன்னதாகவே வந்துவிட்ட குருவானவர் ஆலய முன்றலிலே ஒரு கழுதை இறந்து கிடப்பதைக் கண்டார்.
உடனடியாக அப்பகுதி சுகாதார அதிகாரிக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி விடயத்தைச் சொல்லி, உடனேயே கழுதையை அகற்றுமாறு கேட்டுக்கொண்டார்.
பங்குச்சாமியோடு கடுப்பில் இருந்த அந்த அதிகாரி.
அவரைக் கொஞ்சம் கேலி செய்ய விரும்பி.



"இறந்தோரை அடக்கம் செய்வது உங்கள் வேலைதானே பாதர் இதையும் நீங்களே செய்யலாமே" எனச் சொல்லி எள்ளி நகையாடினார்.
உடனே சுதாரித்துக் கொண்ட முன்மதி மிக்க குரு. அதிகாரியிடம் பதிலாகச் சொன்னார்.
"அது சரிதான் கணவானே! அடக்கம் செய்வது எமது தொழில்தான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அதற்கு முதல் இறந்தவரின் உறவினர்களுக்கு அறிவிக்க வேண்டும் அல்லவா? அது தான் உங்களுக்கு தெரிவித்தேன்."
பதில்கேட்ட அதிகாரியின் முகத்தில் அசடு வழிந்தது!!!!

● நமது தலைப்புக்கும் இந்தக் கதைக்கும் என்ன தொடர்பு
என விளக்கமெல்லாம் கேட்கப்படாது. நாங்கள் தொடர்பு ஏற்படுத்துவோம்ல!..
அது எப்படியென்றால்
நம்ம இறைநம்பிக்கையாளர்கள் அனேகப்பேர் நினைப்பது " மறைபரப்பு" என்பது தனியே "அருள் நிலையாளரின்" வேலை.
நமக்கும் அதுக்கும் சம்பந்தமே இல்லை என கைகழுவித் தப்பிக்கும் மனநிலை.
இந்நிலை மாறவேண்டும்
திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவருக்கும் மறைபரப்பும் கடப்பாடு உண்டு
என்பதை எல்லோரும் உணர வேண்டும். வழிகளைத் தேடவேண்டும்..
பல நேரங்களில் ஒருசிலரை என்ன "செய்றீங்க" என்று கேட்டால்
"சும்மாதான் இருக்கின்றேன்" என்று பதிலுரைப்பார்கள்.
அட கிறுக்குப் பயபுள்ளைகளே! ஒரு நிமிடத்தில்



150 விவிலிய வார்த்தைகளை பேசலாம்.
40 விவிலிய வார்த்தைகளை எழுதலாம்.
200 விவிலிய வார்த்தைகளை படிக்கலாம்.
பூரணமாய் ஒரு வாக்கியத்தை மனனம் செய்யலாம்.
சும்மா சும்மா இருந்து பொன்னான நேரத்தை மண்ணாக்க வேணாம் மக்களே.

● தூய பவுலின் வார்த்தைகள் நினைவிருக்கிறதா?
"நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்கு கேடு."
இன்று நம் கேடுகளைப் பட்டியலிடுவோமா?

-நம் பிள்ளைகளின் பெயர்கள் மறை சார்ந்ததா / சினிமா சார்ந்ததா?
புனிதரின் பெயரைச் சூட்டி மறை வளர்க்கிறோமா?
கூத்தாடி பெயரைச் சூட்டி திரை வளர்க்கிறோமா?
-நம் பிள்ளைகளின் வாயில் அடிக்கடி வருவது வேத வசனங்களா?
அல்லது சினிமாவின் வில்லத்தன வசனங்களா?
( கல்யாணந்தான் கட்டிக்கிட்டு ஓடிப்போலாமா...)
-நம் பிள்ளையின் முதன்மைத் தெரிவு மறைக்கல்வியா / பிரத்தியேக வகுப்பா?
-நீதிக்கதைகளைச் சொல்லிக்கொடுக்கும் பாட்டி/ தாத்தா வீட்டிலேயா அல்லது வயோதிப மடத்திலா?
-நம் குடும்பம் கூடிச் செபிக்கும் குடும்பமா / கூடிக் கூத்தடிக்கும் குடும்பமா?
இப்படி மறைபரப்பக் கிடைக்கும் சிறு சிறு சந்தர்ப்பங்களைத் தவறவிட்டு
நம் தலைமேல் நாமே மண்ணை வாரிக் கொட்டுகிறோம்.



● இன்று அன்னையாம் திருச்சபை நம்மை:
-ஆபிரிக்க காட்டுக்குள்ளோ. அவுஸ்ரேலிய ஆதிவாசிகளுக்கோ சென்று மறைபரப்ப சொல்லவில்லை
-கொதிக்கும் எண்ணெயில் விழுந்தோ. எரியும் கம்பத்தில் தொங்கியோ உயிர் விடச்சொல்லவில்லை
-சிலுவையில் தலைகீழாய் அறையப்பட்டோ. சிரச்சேதம் செய்யப்பட்டோ மரணிக்கச் சொல்லவில்லை
-மிருகங்களுக்கு இரையாய் ஆக்கப்பட்டோ. சிங்கத்தின் குகைக்குள் தள்ளப்பட்டோ சாகச்சொல்லவில்லை
மாறாக........
இருக்கும் இடத்தில் இருந்து கொண்டு
நற்செய்தியின் விழுமியங்களை வாழ்வாக்கினாலே போதும்
மறை தானாகவே பரப்பப்படும். ஏனென்றால்.
கடல் கடந்து நாடுகள் பல சென்ற பிரான்சிஸ் சவேரியாரும் மறைபரப்பாளரே
நான்கு சுவருக்குள் இருந்து மறைபரப்பிய குழந்தை தெரேசாவும் மறைபரப்பாளரே

● அழியும் செல்வங்களால் உலகை கவர்ந்திழுக்க
விளம்பர உலகம் செய்யும் விந்தைகளைப் பாருங்கள்
சாதாரண குடிபானம் **cocacola**
இதை உலகின் மூலை முடுக்குகளில் வாழும் மனிதரும் அறிந்திருக்கின்றனர்.
ஆனால்..
இயேசு என்னும் பெயரைக் கூட கேள்விப்படாத சமூகங்கள்
இன்று உலகில் எத்தனையோ உள்ள. அப்படியானால்...



-நமது சான்று வாழ்க்கையில் ஏதொவொரு குறையிருக்கிறது.
-நமது ஒளி இன்னும் மனிதர்முன் ஒளிரவில்லை
-மறையைப்பற்றிய நமது அறிவு இன்னும் மங்கலாயுள்ளது.
-திருமலை தீப ஆசிரியர் எழுதியது போல.
நாம் நம் வட்டத்தை விட்டு இன்னும் வெளிவரவில்லை

● நம்ம ஆட்கள் **Phone** மறைபரப்பும் லெட்சணத்தைப் பார்த்திருக்கிறீர்களா?
-அந்தோனியாரின் புதுமையைச் சொல்லி 10 பேருக்கு அனுப்பச் சொல்வது
-இறையிரக்க ஆண்டவரின் செபத்தை **Like** செய்தால் நல்லது நடக்குமாம்.
-மாதா படத்தை 20 பேருக்கு அனுப்பினால் 20 நிமிஷத்தில் பலன் கிடைக்கும்
-சகாயமாதா நவநாளை 40 பேருக்கு அனுப்பினால் நாளைக்குள் நல்லது நடக்கும்
இப்படி ஏராளமான கூத்துக்கள் நல்லவேளை
"இதை அனுப்பாவிட்டால் அல்லது உதாசீனம் செய்தால் இரத்தம் கக்கி சாவீர்கள்"
என்கிற கொலைமிரட்டல்கள் இன்னும் ஆரம்பிக்கவில்லை.

●நாடும் வீடும் துறந்து வழி தெரியாமல், மொழியறியாமல்
பணியாற்றிய நம் பாசமிகு மிஷனரிகள்
தங்கத் தட்டில் வைத்து நம்மிடம் ஒப்படைத்த மறையை
இன்று நாங்கள் சந்தி சிரிக்க வைப்பதில் கெட்டிக் காரராகிவிட்டோம்.



-பரம்பரைக் கத்தோலிக்கர் என்ற பகட்டுக் கௌரவம் ஒருபுறம்
-வேளாவேளைக்கு திருவருட்சாதனங்கள் என்ற கெடுபிடி மறுபுறம்
-நேரமிருந்தால் மட்டும் திருப்பலிப் பூசை என்ற திமிர் ஒருபுறம்
-கட்டினால் எல்லாம் நிறைவேறும் என்கிற திருப்தி மறுபுறம்
-வருடத்திற்கொரு யாத்திரை என்கிற மனத்திருப்தி ஒருபுறம்
-நேர்த்திக் கடன்களை சரிவரச் செய்வதிலே ஒரு பெருமிதம்
-திருவிழாக்களை ஆடம்பரமாகக் கொண்டாடுவதிலே போட்டா போட்டி
-சந்திக்கு சந்தி சுரூபங்களை வைப்பதிலே ஏட்டிக்குப் போட்டி
-பையிலே பெறுமதிமிக்க செபமாலை. கழுத்திலே விலையுயர்ந்த குருசு
-வீட்டின் சுவர்கள் நிறைய வேதப்படங்கள்...
நல்லா பரப்புறாங்கையா....... மறைய....

● எனவே இந்நிலை தொடர்ந்தால்
எம் மறையறிவு கொஞ்சம் கொஞ்சமாய் மங்கிப் போய்.
எம் விசுவாச வாழ்க்கை நோய் காணும். அதன் இறுதி விளைவு மரணம்...
எது மரணிக்கும். தொடரும் சம்பவத்தை படியுங்கள்





பங்குச்சாமி ஒலி பெருக்கியில் அறிவித்தார்..
"என் நெஞ்சுக்கினிய இறைமக்களே !!!!!
உங்களுக்கோர் துக்க செய்தி
நமது பங்கு செத்துப்போச்சு
நாளை மாலை நல்லடக்கம்...
இரங்கல் திருப்பலியும் இடம்பெறும்
பங்கு மக்கள் அனைவரும் தவறாது வருவீர்!
ஆசைப் பங்கிற்கு இறுதி அஞ்சலியும் செய்வீர்"

செய்தி கேட்டு டெரர் ஆனார்கள் பங்குமக்கள்
சாமியாருக்கு நட்டுக் கிட்டுக் கழண்டுத்தோ என்றும் எண்ணினார்கள்
இருப்பினும் மறுநாள் சாவு மணிகேட்டு கோவிலில் கூடினார்கள்.
பீடத்தின் முன்னால் ஒரு பிரேதப்பெட்டி திறந்திருந்தது.
மக்கள் எல்லோரையும் ஆவல் அணைத்திருந்தது.
மீண்டும் பங்குச் சாமி அறிவித்தார்!.
இப்போது ஒவ்வொருவராக வந்து சவப்பெட்டியுள் இருக்கும் பங்கை
இறுதியாக ஒரு முறை பார்த்துச் செல்லலாம்.
அச்சமும் ஆவலும் கலந்தவராய். ஒவ்வொருவராய் போய் பெட்டியுள் பார்க்க ... அங்கே
அடியில் அழகாய் பொருத்தப்பட்ட கண்ணாடியில் ஒவ்வொருவர் முகமும் பிரதிபலித்தது.
பங்குச்சாமி ஏன் இப்படிச் செய்தார்???
ஏனென்றால் பங்கு உண்மையிலேயே செத்துப் போய்த்தான் இருந்தது.
பூசைக்கு ஒழுங்காய் வருவதில்லை பங்கிலே ஒரே சண்டை சச்சரவு
பங்குச் சபை எப்போதும் சண்டையிலே முடியும்
பங்குச் சபைக்குள் போட்டி. பொறாமை. அதிகார வெறி. ஆதிக்கம்!
சாதி வெறியும் சாதிப் பாகுபாடுகளும்... இன்னும் எக்கச் சக்க சிக்கல்கள். முனகல்கள்
பாரதிதாசன் வசனங்களில் சொல்லப்போனால்....
"ஆலயம் அழகாகவும். ஆடம்பரமாகவும். கம்பீரமாகவும். களை கட்டியும்தான் இருந்தது.
ஆனால் அங்கே ஆண்டவனைக் காணவில்லை.."

● எனவே இத்தாள் சகல விசுவாசிகளுக்கும் அறியத்தருவது யாதெனில். நம்மிலிருந்தே மறையறிவிப்பைத் தொடங்குவோம். கடுகு விதைகளாக தொடங்கப்படுவது நிச்சயமாக பெரு விருட்சமாக ஒரு நாள் மாறும். ஏனெனில் இது "இறையரசின்" செயல்.

அருட்பணி. T.A. யூலியன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்வு சார்ந்த வழிபாடு

இத்தொடரை எழுதும் தென்இந்தியாவைச் சேர்ந்த பணி. அலெக்ஸாண்டர் மரியதாஸ் அவர்கள் கோவை மறைமாவட்ட இருபவர். இத்தாலியின் உரோம்நகரியில் திருவழிபாட்டில் (Liturgy) இதுகலைப்பட்டமும் மறைபரப்பும் பணியியலில் (Missiology) இளைவர் பட்டமும் பெற்றவர்.



## அடித்தளமாகும் நம்பிக்கை

"திருவழிபாட்டைத் தாம் அணுக இயலுமுன் மக்கள் கிறிஸ்தவ நம்பிக்கைக்கும், மனமாற்றத்திற்கும் அழைக்கப்பெற வேண்டும்... "

(திருவழிபாடு எண்- 9, இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு)

மனித இனம் தோன்றிய காலம் முதலே வழிபாடு இருந்திருக்கிறது. தனக்கு மேலே, ஏதோவொரு சக்தி இருப்பதை உணர்ந்த மனிதர்கள் அச்சவுணர்வோடோ, பாதுகாப்புக் கருதியோ, மரியாதை வணக்கத்தை வெளிப்படுத்தவோ, ஆராதிக்கவோ, நன்றி செலுத்தவோ பல்வேறு விதங்களில் அவரவர் காலச்சூழல் மற்றும் சமூக, கலாச்சார, நம்பிக்கையின் பின்னணியில் வழிபாடுகளை செய்தனர். நம் கத்தோலிக்க திருமறையில் உள்ள வழிபாடு, இறைவெளிப்பாட்டையும், நமது நம்பிக்கையையும் அடிப்படையாகக் கொண்டது. வழிபாட்டின் அடித்தளமாக நம்பிக்கை, வாழ்விற்கும் அடித்தளமாக இருக்க வேண்டும். அப்படி இல்லாதபோது, வழிபாடு வெற்றுச் சடங்காகிறது. வாழ்வு அர்த்தமற்றதாகிறது.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன் வழிபாடுகள் இலத்தீனில் நடந்தன. என்ன பொருளென்று விளங்காமலே மனப்பாடம் செய்த செபங்களை சொல்லி, குருவின் முதுகுப்புறத்தில் நின்று வழிபாடுகளில் கலந்து கொண்ட காலம் அது. பெரும்பாலும் தெரிந்த மனவல்லிய செபங்களையோ, செபமாலையையோ செபித்து இறுதியில் நற்கருணை உட்கொண்டு வந்தனர் நம் முன்னோர்கள். பொருளுணர்ந்து பங்கேற்க வாய்ப்புக்கள் மிகக் குறைவு. நம்பிக்கைக் கோட்பாடுகளின் விளக்கங்களை அறிந்திருந்தாலும் வழிபாட்டில் குறிப்பாக பொது வழிபாட்டில் அர்த்தமுணர்ந்து முழுமையாக பங்கேற்க முடியாதிருந்தது பலருக்கு.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் (1962-1965) இரண்டு உலகப் போர்களுக்குப் பின் நடைபெற்றது. குறிப்பாக, "திருவழிபாடு" (**SACROSANCTUM CONCILIUM**) ஏடு தோன்றிய வரலாற்றைக் குறிப்பிடும் போது வழிபாட்டு மறுமலர்ச்சி இயக்கங்களின் பங்களிப்பை மறுக்க இயலாது.

"நிறுவனமாகிவிட்ட வழிபாடுகள் வாழ்வோடு தொடர்பு இல்லாமல் போனதால் உலகப் போர்களுக்குப் பின் மறுமலர்ச்சியின் தேவை அதிகமாக உணரப்பட்டது" என பணி.. ம. ஜோ. பிரிட்டோ. சே.ச "திருவழிபாடு" வத்திக்கான் சங்க ஏட்டின் தமிழாக்கத்தில் முன்னுரையாகக் கூறுகிறார். வாழ்வோடு தொடர்பு இல்லாமல் போகிற போது வழிபாட்டில் மறுமலர்ச்சி அத்தியாவசியமாகிறது. அதேபோல வழிபாட்டோடு தொடர்பில்லாத வாழ்வையும் ஆய்வுக்குட்படுத்தி சீரமைக்க வேண்டியது எமது பொறுப்பு.

இந்த தொடர் கட்டுரைகளில் வழிபாட்டை அடித்தளமாகக் கொண்டதாக நம் வாழ்வை பக்குவப்படுத்தி சிறுசிறு தலைப்புக்களில் முயற்சிப்போம். "திருவழிபாட்டில் பங்கு கொள்வதில் மட்டும் அருள்வாழ்வு அடங்கி விடுவதில்லை" (திருவழிபாடு எண் - 12).

திருவழிபாட்டின் நோக்கம்

1. இறைவனுக்கு ஆராதனை செய்தல்
2. மனிதரைப் புனிதப்படுத்துதல்
3. இறையரசைக் கட்டியெழுப்புதல்



அப்படியெனில், ஆலயத்தோடு அல்லது செப நேரத்தோடு முடிந்து விடுவதில்லை நம் அருள்வாழ்வு. திருவழிபாடு மனிதரைப் புனிதராக்கி இறையரசைக் கட்டியெழுப்பத் தயாராகுகின்றது, "சென்று வாருங்கள்" என்று சொல்லி வீரத்திலகமிட்டு வாழ அனுப்புகிறது. அப்படி அனுப்பப்பட்ட நாம் வழிபாட்டின் முக்கிய அம்சங்களை வாழ்வாக்க முயற்சிக்கிறோமா?

கோவிட் - 19 ஒரு அசாதாரணமான சூழலில் நம்மை வைத்திருக்க, இனி என்ன செய்வதென்றே தெரியாத குழப்பம். ஊகானில் பரவியபோது இல்லாத பயம், நம் நாட்டில், நம் மாநிலத்தில், நம் ஊரில், நம் தெருவில், நம் பக்கத்து வீட்டில் என படிப்படியாய் நெருங்கும்போது, அதிகரித்தது. மணியடித்தோ, விளக்கு ஏந்தியோ மாதக்கணக்கில் வீட்டுக்குள்ளே முடங்கியிருந்தோ என்ன பயன் என நொந்து கிடக்கிறோம். கஷ்டம் என்றாலே கடவுளே என்று ஓடும் நமக்கு ஆலயங்களும் பூட்டப்பட்டது மிகப்பெரிய அதிர்ச்சி. நாளையைப் பற்றிய கனவுகள், இலக்குகளை நோக்கிய பயணங்கள், முன்னேறிவிட எடுத்த முயற்சிகள் கேள்விக்குறிகளாய் மாறி நிற்கையில் நமது இறைநம்பிக்கை எப்படி இருக்கிறது? விரக்திக்கு தள்ளப்பட்டவர்களாய் விழுந்து கிடக்கிறோமா? நம்பிக்கையால் தூண்டப்பட்டவர்களாய் எழுந்து நிற்கிறோமா? இந்த இக்கட்டான சூழலில் வழிபாட்டின் அடித்தளமான நம்பிக்கை, அன்றாட வாழ்விற்கு அடித்தளமாகிறதா?

நோய்வாய்ப்பட்ட ஜான் ஹென்றி நியூமேன் (1801-1890) இத்தாலியின் பலெர்மோ பகுதியிலிருந்து தன் நாடான இங்கிலாந்திற்குப் பயணம் செய்ய காத்திருந்தார். மூன்று வார காத்திருப்பில் உடல்வலி, தூக்கமின்மை, சோர்வு, நோயின் தாக்கம் என அனைத்தும் அவரை மெலிந்து போக வைத்தன. கடைசியில் ஒரு ஆரஞ்சு வண்ணக்கப்பல் அவரைச் சுமந்து கொண்டு இங்கிலாந்தை நோக்கி பயணித்தது. ஆனால் போனிஃபாசியோ கால்வாயில் வாரக்கணக்கில் வழிதவறி அலைக்கழிக்கப்பட்டது. உடன் பயணிகள் அனைவரும் நம்பிக்கையின்றி களைத்துப் போயினர். இலக்கை அடையும்வரை எதுவும் உத்தரவாதமில்லை. எவ்வளவு சுவாரஸ்யமாக நேரத்தைக் கழிக்க முயற்சித்தாலும் பயமும் அச்சவுணர்வும் அவர்களை விரக்தியின் விளிம்பிற்கு தள்ளிக் கொண்டிருந்தன.

ஆனால் ஜான் ஹென்றி நியூமேன் அவ்வளவு வேதனையிலும் நம்பிக்கை இழக்கவில்லை. அங்கிலிக்கன் சபையின் அந்த இளம் குரு தன் நம்பிக்கையை கவிதையாக்கினார். அந்தக் கவிதையை எழுதி முடித்த போது, அந்த பாய்மரக்கப்பலின் பாய் விரிந்து கப்பல் அவர்களின் இலக்கு நோக்கி நகரத் தொடங்கியது. வரலாற்றுச் சிறப்புமிக்க அந்தப்பாடல் 1833இல் எழுதப்பட்டிருந்தாலும் இன்றும்கூட தனித்துவம் பெற்று விளங்குகிறது. **"Lead Kindly light"** இந்தப்பாடலை எழுதிய ஜான் ஹென்றி நியூமேன் பின்னாளில் கத்தோலிக்க குருவாக, கர்தினாலாக என திறம்படப் பணியாற்றி தன் 89ம் வயதில் இறைவனடி சேர்ந்தார். அக்டோபர் 13, 2019இல் இவர் நம் திருத்தந்தை பிரான்சிஸால் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். இப்பாடலின் தமிழாக்கம் இன்றைய அசாதாரண சூழலில் கூட ஏற்றதாயிருக்கும். அதில் ஒரு பகுதி இங்கே:

"ஒளியே!
காரிருளின் நடுவே கருணையுடன் வழிநடத்து
என்னைத் தொடர்ந்து வழிநடத்து
இருள்மயமான இந்த இரவில்
இல்லத்திலிருந்து தொலைவில் நான்
என்னைத் தொடர்ந்து வழிநடத்து.
வெகுதூரம் பார்க்க விரும்பிக் கேட்கவில்லை
ஒரு தப்படி மட்டும் காட்டு போதும்
என் பாதம் வழிநடத்து...

இந்தப் பாடல் அன்று மட்டுமல்ல, பல முக்கிய தருணங்களிலும் நம்பிக்கை ஒளியை அணையவிடாமல் செய்திருக்கிறது. நம் தேசத் தந்தை மகாத்மா காந்தியின் மனம் கவர்ந்த பாடல் இது. அண்டார்டிக் துருவத்தில் லிங்கன் எல்ஸ் பொர்த்தின் விமானம் உடைந்து விழுந்து அவரது ரேடியோ கூட வேலை செய்யாத போது, விமான தளத்தோடு தொடர்பு கொள்ளமுடியாத நிலை. நூற்றுக்கணக்கான மைல் தூரத்தில் பனிப்பாறைகளின் மத்தியில் அவர் இந்தப் பாடலைத்தான் திரும்பத் திரும்பப் பாடி நம்பிக்கையோடு காத்திருந்தார். ஆறுதலும் வலிமையும் பெற்றார்.

பெப்ரவரி 16, 1909இல் இங்கிலாந்தின் துர்காம் நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தின் காரணமாக பலர் புதையுண்டு இறந்தனர். சுரங்கத்தின் அடியில் ஒரு சிறு பகுதியில் மண் சரிவு ஏற்படாதிருக்க அந்த அடர்ந்த இருட்டில் 30 பேர் இந்தப் பாடலை பாடிக் கொண்டே நம்பிக்கையோடு காத்திருந்தனர். 16 மணிநேர போராட்டத்திற்குப் பின் இவர்கள் மீட்புப்படையினரால் மீட்கப்பட்டனர்.



1912இல் டைட்டானிக் கப்பல் பெரிய பனிப்பாறையில் மோதி விபத்துக்குள்ளான போது உயிர்காப்பு படகுகளில் (**Lifeboats**) இருந்தவர்கள் மறுநாள் காலை கர்பத்தியா (**Carpathia**) மீட்புக் கப்பலால் மீட்கப்படும்வரை இந்தப் பாடலைப் பாடி உறையும் குளிரில், நடுக்கடலில் நம்பிக்கையோடு காத்திருந்தனர்.

புனித பிரான்சிஸ் டி சேல்ஸ் சொல்கிறார், " இந்த வாழ்வில் ஏற்படும் மாற்றங்களில் வாய்ப்புகளை பயத்துடன் அணுகாதீர்கள். கடவுள் அவற்றிலிருந்து உங்களை மீட்பார் என்ற முழு நம்பிக்கையுடன் அவற்றை அணுகுங்கள். இதுவரை அவர் உங்களைக் காத்து வந்திருக்கிறார். அவரது அன்பான கரங்களைப் பிடித்துக் கொண்டால் எல்லா விஷயங்களிலும் அவர் உங்களைப் பாதுகாப்பாக வழிநடத்துவார். உங்களால் தாங்க முடியாத போது அவர் உங்களைத் தன் கரங்களில் ஏந்திக் கொள்வார். நாளைஎன்ன நடக்குமென்று கவலைப்படாதீர்கள். இன்று காத்திருக்கும் தந்தையே நாளையும். ஒவ்வொரு நாளிலும் காத்திடுவார், அல்லது அதைத் தாங்கக் கூடிய வலிமையைத் தந்திடுவார். எனவே அமைதி கொள்ளுங்கள். கவலையான எண்ணங்கள், கற்பனைகளை ஒதுக்கி வையுங்கள்". (வில்லியன் எயிஷ்லர் வாட்சன் எழுதிய விளக்குகள் பல தந்த ஒளி, மொழிபெயர்த்தவர் பி. உதயகுமார், பக். 67-68)

எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கை தளர்ந்து விடாதீர்கள். குறிப்பாக இந்த **Covid - 19** வைரஸ் தொற்றுக் காலத்தில் வழிபாட்டின் அடித்தளமாக நம்பிக்கை வாழ்வின் அடித்தளமாகட்டும். இறைநம்பிக்கையோடு அன்றாட வாழ்வின் யதார்த்தங்களை, சவால்களை சந்திப்போம். "திண்ணிய நெஞ்சினராய்" மாற்றம் பெறுவோம்.

அருட்பணி. அலெக்ஸாண்டர் மரியதாஸ்

"பொல்லார் செலுத்தும் பலி ஆண்டவருக்கு அருவருப்பைத் தரும்" (நீ. மொ- 15:8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய நற்செய்தி அறிவிப்பின் நட்சத்திரம்



அருட்சகோ. எமர்சன் றாகல்

மீள் நற்செய்தி அறிவிப்புக்கான தொனிப்பொருளில் சிந்தனைகள் எழும்போதெல்லாம் ஒரு பெண்ணை மறக்க முடியாது. அப்பெண் முதன்முதலில் இறையழைப்பை மனமுவந்து ஏற்றுக் கொண்டார். அப்பெண் மீட்பின் வரலாற்றில் முதல் பெண்மணியாக மீட்பின் வித்தினைக் கருவில் சுமந்தார். இறுதியாக நற்செய்தி அறிவிப்பின் நட்சத்திரமாக விளங்குகின்றார். அவரே எம் அன்னை மரியாள்.

இறைவார்த்தையை முதலில் தனது உள்ளத்தில் கேட்டு, அதை உள்ளத்தில் இருத்தி, அவ் வார்த்தையையே இவ்வுலகிற்கு பெற்றுக் கொடுத்த அன்னை மரியாள் திருமுழுக்கு அருளடையாளத்தின் மூலம் நற்செய்தி அறிவிப்பின் பணியைப் பெற்றுள்ள எம் அனைவருக்கும் முன்மாதிரியாக விளங்குகின்றாள். இதனையே திருத்தந்தை 6ம் போல், அன்னை மரியாளை "நற்செய்தி அறிவிப்பின் நட்சத்திரம்" **(Star of Evangelization)** என்றும் திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல் "புதிய நற்செய்தி அறிவிப்பின் நட்சத்திரம்" **(Star of the new Evangelization)** என்றும் அழைப்பதன் ஊடாக உறுதிப்படுத்துகின்றனர்.

**1. தூய ஆவியில் நிறைந்த நற்செய்திப் பணியாளர் அன்னை மரியாள்**

"ஆவியில் நிறைந்த நற்செய்திப் பணியாளர் என்றால் ஆவியின் பணிகளுக்கு பயமில்லாத, திறந்த மனதுடன் முன்வரும் நற்செய்திப் பணியாளர் எனப் பொருள்படும்" (நற்செய்தியின் மகிழ்ச்சி – **Evangelii Gandium (EG)** எண் 259) திருஅவையின் மறைதூதுப்பணி தூய ஆவியின் வருகையின் பின்னரே ஆரம்பிக்கப்பட்டது. (தி.ப 2) ஆனால் அன்னை மரியாள் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டதிலிருந்து இறைவனுக்கு அடிபணிந்தவராக மனமுவந்து இறைபணியில் ஈடுபட்டார். மரியாவின் வாழ்க்கை நற்செய்திப் பணியின் முன்னுதாரணமாக திகழ்ந்தது.

எப்பொழுதெல்லாம் நாம் சிலவற்றை ஆவியில் நிறைந்துள்ளது என்று சொல்கின்றோமோ, அது வழக்கமாக உள்ளார்ந்த தூண்டுதலையே குறிக்கிறது. அது ஊக்கப்படுத்துகிறது, இயக்குகிறது, செழிக்கச் செய்கிறது, தனிப்பட்ட மற்றும் குழுச்செயல்களுக்கான அர்த்தத்தைக் கொடுக்கிறது**(EG 261)**. அன்னை மரியாள் தூய ஆவியில் நிறைந்துள்ளவர் என திருஅவையின் விசுவாசக் கோட்பாடு கூறுவது உண்மையென்றால் அன்னை மரியாளின் வாழ்வும் தூய ஆவியால் தூண்டப்பட்டுள்ளது, ஊக்கப்படுத்தப்பட்டுள்ளது, இயக்கப்பட்டுள்ளது என்று நாம் கண்டு கொள்ளலாம்.

**2. மரியாள் : நற்செய்தி அறிவிப்பின் தாய்**

"தூய ஆவியோடு, மக்கள் மத்தியில் அன்னை மரியாள் எப்பொழுதும் பிரசன்னமாக உள்ளார். அவர் திருத்தூதர்களோடு தூய ஆவியின் வருகைக்கான செபத்தில் இணைந்து கொண்டார். (தி.ப 1, 14) அதன் வழியாக மறைபரப்புப் பொழிவு பெந்தகோஸ்தே நாளில் சாத்தியமானது. அவர் நற்செய்தி அறிவிக்கும் திருஅவையின் தாய். அவர் இல்லாமல் புதிய நற்செய்தி அறிவிப்பினை நம்மால் உண்மையாகவே புரிந்துகொள்ள முடியாது." **(EG 284)**

**3. புதிய நற்செய்தி அறிவிப்புப் பணியின் நட்சத்திரம்**

இவ்வாறு, வாழும் நற்செய்தியின் தாயாக புனித மரியாள் திருஅவையின் புதிய நற்செய்தி அறிவிப்புப் பணிக்காக பரிந்து பேசுகின்றார். இரண்டாம் வத்திக்கான் சங்கம், திருஅவைக்கான ஏடு **(Lumen Gentium)** எண்கள் 52 - 69 கூறுகிறது: மரியாள் இறைநம்பிக்கையில் வாழ்ந்து அதில் திடம்பெற்ற இறைநம்பிக்கையின் பெண். அவரது முன்மாதிரிகையான இறைநம்பிக்கையின் திருப்பயணம் திருஅவைக்குத் தொடர்ந்தும் ஓர் அடையாளமாக உள்ளது. தன்னுடைய திருப்பயணம் தூய ஆவியால் வழிநடத்தப்பட அவர் அனுமதித்தார். அவர் தன்னை முழுவதுமாக இறைவனுக்கு ஒப்படைத்தார். இவ்வகை அர்ப்பணிப்பால் அவர் மீட்பின் செய்தியை எல்லோருக்கும் அறிவிக்க எமக்கு உறுதுணையாய் உள்ளார்.

நற்செய்தி அறிவிப்புப் பணியில் வறண்ட, இருள்படர்ந்த மற்றும் சோர்வு அடையும் தருணங்கள் அதிகமாகவே காணப்படும். அன்னை மரியாள் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டிருந்தாலும் இதற்கு விதிவிலக்கில்லை. இயேசுவின் குழந்தைப் பருவ நிகழ்வுகள், இயேசுவின் இறுதி நாட்கள் அனைத்தும் இதற்கு சான்று பகர்கின்றன. திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல் அவர்கள் தனது சுற்றுமடல் "மீட்பரின் தாய்" **(Redemption Mater, 25 March** 1987) எண்கள் 6 -7ல் "அன்னை மரியாள் நாசரேத்தில் இயேசுவின் குழந்தைப்பருவ வருடங்களில் இத்தகையவற்றை அனுபவித்தார். இதுதான் நற்செய்தியின் தொடக்கம், மகிழ்ச்சி நிறைந்த நற்செய்தி ஒரு வகையான முகத்திரை வழியாக பார்க்க முடியாத ஒருவரிடம் ஈர்க்கப்பெறவும், அந்த மறைபொருளுடன் நெருங்கிய உறவில் மரியா பல ஆண்டுகளாக, அவருடைய மகனுடைய மறைபொருளின் நெருங்கிய உறவில் வாழ்ந்தார், அவருடைய இறைநம்பிக்கைத் திருப்பயணத்தில் முன்னோக்கிச் சென்றார்" என்கிறார். இதற்கமைய நாம் புரிந்து கொள்வது யாதெனில், மரியாள் மீட்பின் பணியில் பங்காளியாக திகழ்ந்து, பக்கத்துணையாக நற்செய்தி அறிவிப்பவளாக விளங்குகிறாள்.

திருஅவையின் நற்செய்தி அறிவிப்புப் பணியின் முறைமையில் **(Style)** மரியன்னையின் பங்களிப்பு அவசியமானதொன்றாகும். எப்பொழுதெல்லாம் நாம் மரியாளை உற்றுநோக்குகிறோமோ அப்பொழுதெல்லாம் புரட்சிகரமான அன்பு மற்றும் கனிவின் தன்மையை மீண்டும் மீண்டும் நாம் ஆச்சரியத்தோடு பார்க்கக் கூடியதாகவே உள்ளது. அவரின் தாழ்ச்சியும், கனிவும் பலவீனர்களின் புண்ணியங்கள் அல்ல, ஆனால் தங்களை முக்கியமானவராக நிலைநிறுத்துவதற்கு மற்றவர்களைத் தாழ்வாக நடத்தத் தேவையில்லாத வலிமையானவர்களுடையது. நாம் மரியாளின் வாழ்வை தியானிக்கையில் "ஆண்டவர் வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார் செல்வரை வெறுங்கையராய் அனுப்பி விடுகிறார்", (லூக்கா 1:52 - 53) என்பதையும் அவர் நீதியை நிலைநாட்டுபவர் என்பதையும் புரிந்துகொள்கின்றோம். எனவே எம் நற்செய்திப் பணியில் இறைவன் எமக்கு உகந்தவற்றை நிலைநிறுத்துவார் எனும் உறுதித்தன்மை மனதில் விதைக்கப்படுகின்றது. "இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தம் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்துக் கொண்டிருந்தார்" (லூக்கா 2:19), மிகப் பெரிய மற்றும் மிகச் சிறிய நிகழ்ச்சிகளில் எல்லாம் கடவுளின் ஆவியின் தடங்களை மரியாள் உய்த்துணர்ந்தாள். கடவுளின் மறைபொருளை நமது உலகிலும், மனித வரலாற்றிலும் மற்றும் நம்முடைய அன்றாட வாழ்விலும் தொடர்ந்து தியானித்தார். அவர் நாசரேத்தில் செபம் மற்றும் பணியின் பெண். மற்றவர்களுக்குப் பணிபுரிய தன்னுடைய நகரத்தைவிட்டு விரைந்து சென்ற பெண். எனவே இத்தகைய பெண்ணின் வாழ்வு எல்லா கிறிஸ்தவர்களுக்கும் குறிப்பாக நற்செய்தி பணியாளர்களுக்கு மிகச் சிறந்த முன்னுதாரணமாகும்.

மரியாவும் திருஅவையும் இறைவார்த்தையின் பணியாளர்களாக செயல்படுகின்றனர். ஆனால் அன்னை மரியா திருஅவைக்கு முன்னோடியாக திகழ்கின்றாள். திரு அவை தனது வாழ்வில் குறிப்பாக தனது நற்செய்தி அறிவிப்புப்பணியில் மரியாளை தனது மாதிரியாகக் கொண்டு செயற்படுகின்றது. மரியாளிடம் இருந்த நம்பிக்கை, தூய ஆவியானவருக்கு திறந்த மனநிலை, நன்றியுணர்வு, துணிவு ஆகிய நற்பண்புகள் திருஅவைக்கு நற்செய்தி அறிவிப்பின் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

---



சில்லையூரில் குடிகொண்ட சீராளன்
யாகப்பர் பதியினிலே சிறப்புடன்
அந்தோனிப்பிள்ளை அக்னஸ் வாழ்வினிலே
அழகிய மழலையான அருளானந்தனே
சீடத்துவ வாழ்வினை சிந்தையுள்ளிருத்தி
சீரான வாழ்விற்கே உள்நுழைந்தனையே
இயேசுவின் வாழ்விற்கு நற்சான்று பகர்ந்திட
உன்னை உருவமாற்றினாய் உயரிய குருவாய்
இயேசு அனுபவம் நீ பெற்றே சீடனானாய்
சிறிதும் கலக்கமின்றி துணிவோடு பயணித்தாய்
சீரில்லா மனிதரிடையே சிக்கி சிதறுண்டு
போனாலும் பணிவாழ்வில் இத்தனை இடறல்கள்
சிறிதும் அஞ்சாமல் சிறகு விரித்தாய் பலவருடம்
சீரிய நற்பணி சென்ற இடத்தில் நீ பரப்பிட
இன்றோ நாற்பத்தொன்பது வருடங்கள் தடம்பதித்து
ஐம்பது வருடத்தில் அடிபதிக்கும் உன்னை
அருளாளர் இயேசு அன்போடு உனைக்காக்க
உம்பணி சிறக்க வாழ்த்தும் உள்ளங்கள்
நிதம் எமது செபங்களில் உனைத்தாங்கும்

அருட்பணி. அருளானந்தம் அடிகளுடன் பிறந்தநாள் கொண்டாட்டம்

பங்குச் சமூகம்,
சாம்பல்தீவு

---

## இலிங்கநகர் மாலைவகுப்பு மாணவர்கள் 100% சித்தி

திருகோணமலை மறைமாவட்ட ஆயரின் நிதியுதவியோடு நடாத்தப்படும் இலிங்கநகர் புனித யூதாததேயு மாலை வகுப்பைச் சேர்ந்த க.பொ.த சாதாரணதர மாணவர்கள் 2019ம் ஆண்டிற்கான தேசிய பரீட்சையில் 100% சித்தியினைப் பெற்று பங்கிற்கும், புனித யூதாததேயு மாலைவகுப்பிற்கும் பெருமை சேர்த்ததோடு மறைமாவட்ட ஆயரின் ஊடாக கல்வி நிதி வழங்கும் உபகாரிகளையும் கௌரவப்படுத்தியுள்ளனர். பங்குத்தந்தை மற்றும் மாணவர்களை பயிற்றுவித்த பெற்றோர் ஆசிரியர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

**R.** றிஷானி - **6A, 3B**
**T.** டிலுஷியா - **5A, 4B**
**J.** யதுஷா - **4A, 3B, 2C**
**A.** தவருக்ஷன்- **3A, 2B, 4C**
**P.** பவன் - **A, 3B, 5C**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டி முடிவுகள்

## சிறுவர்களுக்கான நிறந்தீட்டுதல் போட்டி

**1ம் இடம்**
லீ. புமேஷியன்
புனித அந்தோனியார் ஆலயம்
இக்பால் வீதி, மூதூர் – 07

**2ம் இடம்**
**B.** டில்ஹான்
புனித சதாசகாய மாதா ஆலயம்
320/1, அன்புவழிபுரம்

**3ம் இடம்**
மன்மதன் சன்சிகா
209, லூர்து அன்னை ஆலய வீதி,
பாலையூற்று

## சிறுகதைப் போட்டி – கோவில் பிச்சைக்காரன்

**1ம் இடம்** – பெயர் குறிப்பிடவில்லை

**2ம் இடம்** – இ. அனுஷயா
திருஇருதய ஆண்டவர் ஆலயம்
இருதயபுரம் – மூதூர்



**3ம் இடம்** – ஜெயதர்ஷன் அபிஷாலினி
55, பூம்புகார் வீதி
பாலையூற்று

## கவிதைப் போட்டி – விளைவின் பலன்கள்

பங்குபற்றியவர்கள் : 12பேர்
சரியாக வடிவமைத்தவர் – ஒருவர் மட்டும்



ஜெயதர்சன் அபிஷாலினி
55, பூம்புகார் வீதி,
பாலையூற்று

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி – 35

1ம் இடம்
ஞ. டிலுஷிகா
கிறிஸ்து அரசர் ஆலயம்
மாங்காயூற்று
கன்னியா

2ம் இடம்
ச. டெல்மா
சகாயபுரம்,
மூதூர்

3ம் இடம்
R. எமில்ராஜ்
செல்வநாயகபுரம்,
இல – 48, நித்தியபுரி



1. எப்பொழுதும் (1:3)
2. இறையாட்சி (1:5)
3. நற்செய்தி (1:8)
4. அடையாளம் (2:9)
5. ஊக்கமளித்து (2:17)
6. புகழ்பெற்றது (3:1)
7. திருமுகத்தில் (3:14)
8. தீயோனிடமிருந்து (3:3)
9. உண்ணலாகாது (3:10)
10. அறிவுறுத்துகிறோம் (3:12)
11. நன்மை செய்வதில் (3:13)
12. மனந்தளர வேண்டாம் (3:13)
13. அமைதி (3:16)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இ | றை | யா | ட் | சி | | | தி | மை | அ |
| | | ல் | தி | வ | ய் | செ | மை | ன் | ந |
| ஊ | க் | க | ம | ளி | த் | து | | | |
| ம் | றோ | கி | து | த் | று | வு | றி | அ | |
| தி | | ல் | தி | த் | க | மு | ரு | தி | எ |
| ய் | உ | ண் | ண | லா | கா | து | | | ப் |
| செ | | | ம் | ள | யா | டை | அ | | பொ |
| ற் | பு | க | ழ் | பெ | ற் | ற | து | | ழு |
| ந | | தீ | யோ | னி | ட | மி | ரு | ந் | து |
| ம | ன | ந் | த | ள | ர | வே | ண் | டா | ம் |

## புனித யோவான் நற்செய்தி அதிகாரம் 7 - 10 வரை

01. யாருடைய மரபிலிருந்து மெசியா வருவார் என மறைநூலில் கூறப்பட்டுள்ளது என மக்கள் பேசிக்கொண்டனர்?
.......................................................................................................

02. இயேசுவைப் பிடித்து வரும்படி காவலர்களை அனுப்பியவர்கள் யாவர்?
.......................................................................................................

03. "அம்மா, அவர்கள் எங்கே? நீர் குற்றவாளி என்று எவரும் தீர்ப்பிடவில்லையா"? என்று கேட்டார்.யாரால் யாருக்கு கூறப்பட்டது?
.......................................................................................................

04. "சிலோவாம்" என்பதன் பொருள் என்ன?
.......................................................................................................

05. இயேசுவால் பார்வை பெற்றவனை இயேசு மீண்டும் கண்டபோது அவரிடம் என்ன கேட்டார்?
.......................................................................................................
.......................................................................................................

06. யூதர்கள் இயேசுவை நோக்கி "உனக்கு இன்னும் ஐம்பது வயது கூட ஆகவில்லை நீ ஆபிரகாமைக் கண்டிருக்கிறாயா" எனக் கேட்ட மக்களை நோக்கி அவர் கூறியது?
.......................................................................................................
.......................................................................................................
.......................................................................................................

07. ரபி இவர்................................................ பிறக்கக் காரணம் இவர் செய்த ...................? இவர் ................................ செய்த பாவமா என்று இயேசுவின் ......................... அவரிடம் கேட்டார்கள். (இடைவெளியைப் பூர்த்தி செய்க.)

08. இயேசு தம்மை நம்பிய யூதர்களை நோக்கி என்ன கூறினார்?
.......................................................................................................
.......................................................................................................
.......................................................................................................

09. விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணை இயேசுவிடம் கொண்டு வந்தவர்கள் யாவர்?
.......................................................................................................

10. இயேசு உமிழ்நீரால் சேறு உண்டாக்கி அச்சேற்றைப் பார்வையற்றவருடைய கண்களில் பூசி என்ன கூறினார்?
.......................................................................................................
.......................................................................................................

11. அவர் பாவியா இல்லையா என்பது எனக்குத் தெரியாது ஒன்று மட்டும் எனக்குத் தெரியும் நான் பார்வையற்றவனாய் இருந்தேன் இப்போது பார்வை பெற்றுள்ளேன் என்றார்.யாரால், யாருக்கு கூறப்பட்டது?
.......................................................................................................

12. இயேசுவை மெசியாவாக ஏற்றுக் கொள்ளும் எவரையும் என்ன செய்து விட வேண்டுமென யூதர்கள் உடன்பாடு செய்து கொண்டிருந்தனர்?
.......................................................................................................
.......................................................................................................
.......................................................................................................

13. இயேசுவால் பார்வை பெற்ற மனிதன் இயேசு யார் என சான்றுபகர்ந்தார்?
.......................................................................................................

14. "நாங்களுமா பார்வையற்றோர்"? என பரிசேயர் இயேசுவிடம் கேட்டபோது அவர் கூறிய பதில் என்ன?
.......................................................................................................
.......................................................................................................
.......................................................................................................
.......................................................................................................

15. இயேசு கோவிலின் சாலமோன் மண்டபத்தில் இருந்த பொழுது யூதர்கள் அவரைச் சூழ்ந்து என்ன கேட்டனர்?
.......................................................................................................
.......................................................................................................
.......................................................................................................

பெயர் :..........................................................................
பங்கு :..........................................................................
முகவரி :..........................................................................

**முடிவுத்திகதி : 31.10.2020**

"போதனைக்குச் செவி கொடுப்பவன் வாழ்வடைவான்" (நீ. மொ- 16:20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கான போட்டி

## படத்திலுள்ள 06 வித்தியாசங்களை கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்



01



02

- பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01 இற்கு மாத்திரம் நிறந்தீட்டி படம் 02இல் வித்தியாசங்களைக் கண்டுபிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- 1, 2,3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்

1ம் பரிசு - 500/- 2ம் பரிசு 300/- 3ம் பரிசு 200/-

பெயர் :........................................

முகவரி :........................................

:........................................

தரம் :........................................

மூதூர் திரு. சவரிமுத்து பண்டிதர் அவர்களின் நினைவாக குடும்பத்தினரின்

அனுசரணையில் நடாத்தப்படும்

மறைபரப்பு மாதத்தையொட்டிய சிறப்புக் குறுங்கதைப் போட்டி

## "ஓநாய்களிடையே ஆடு"
## (மத் - 10:16)

கவனியுங்கள்

⇨சொற்கள் - 250 - 300

⇨இறுதித்திகதி - 31. 10. 2020



பெயர் :........................................

முகவரி :........................................

:........................................

### சிறுவர்களுக்கான நிறந்தீட்டுதல் போட்டி

**1ம் இடம்**
**K**. மேர்மிஷா
5ம் வட்டாரம்,
கும்புறுப்பிட்டி

**2ம் இடம்**
**M**. யுவான் ஜெரமி
125 **A**, உட்துறைமுக வீதி,
திருகோணமலை

**3ம் இடம்**
**A**. டேமியன்
ஆலய வீதி,
சகாயபுரம்

### கவிதை வரிகளை
### சரியாக வடிவமையுங்கள்

போட்டியில் எல்லோரும் பங்கு கொள்ளலாம்

முதலாம் இடம் 500/-
இரண்டாம் இடம் 300/-
மூன்றாம் இடம் 200/-

### விடிவினைத் தேடியே

Fr. N.C. அருள்வரதன்

**இதோ கவிதை வரிகள்**

- உலகையே வருத்தத்திலாழ்த்தியே
- உலகெமெல்லாம் பரவிவிட்ட கொரோனா
- நோய்களென்றும் மரணங்களென்றும்
- எண்ணிக்கைகள் ஏறிக்கொண்டே
- உயர்ந்து கொண்டு செல்வதனால்
- வேதனையின் வடிவங்களே விளைவுகளாகிறதே
- கொடுமையாம் கொரோனா வியாதி
- உலகைப் பற்றிக் கொண்டுள்ள
- உலகினை விட்டு அது
- மறைந்தழிந்து போக வேண்டும்
- இறைவன் துணையாலன்றி
- இது மறைந்து போய்விடாது
- நம் துயர நிலைகள் மறையும் உண்மையே
- இறைவன் நமக்குத் துணையாகவே
- வேண்டுவோம் இறைவனையே ஒன்றாகியே

**இப்போது கவிதை வரிகளை சரியாக வடிவமையுங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மாதம் வெளியாகிறது (அக்டோபர் 2020)

# திருத்தந்தையின் புதிய சுற்றுமடல் "சகோதரர்கள் அனைவரும்"



'சகோதரர்கள் அனைவரும்' என்று பொருள் தரும் Tutti Fratelli என்ற இத்தாலி மொழி வார்த்தைகளைக் கொண்டு ஆரம்பிக்கும் திருத்தந்தையின் புதிய சுற்றுமடல் இம்மாதம் 4ம் திகதி வெளியிடப்படவுள்ளது. சகோதரத்துவம் மற்றும் சமூக நட்புறவினைக் குறித்துப் பேசும் இச்சுற்றுமடல் உலகின் அனைத்து மக்களையும் நோக்கிய அழைப்பாய் அமையவுள்ளது, என வத்திக்கான் அறிவித்துள்ளது. 'சகோதரர்கள் அனைவரும்' Tutti Fratelli எனும் இவ்வார்த்தைகள் புனித பிரான்சிஸ் அசிசியாரிடமிருந்து எடுக்கப்படும் மேற்கோளாகும் (Admonitions, 6, 1: FF 155). இப்புனிதருடைய பெயரையே திருத்தந்தையாக திருப்பொழிவு செய்யப்பட்டபோது தனது பெயராக எடுத்துக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இத்திருமடலை வெளியிடுவதன் முதன் நாளான அக்டோபர் 03, 2020 அன்று புனித பிரான்சிஸ் அசிசியின் திருத்தலத்திற்குச் சென்று அவரது கல்லறையின் மேல் வைத்தே இச்சுற்றுமடலுக்கான தனது கையெழுத்தினை இடவுள்ளார் என வத்திக்கான் அறிவித்துள்ளது.

சமூக தனிமைப்படுத்தல், கொள்ளைநோய் போன்ற பல்வேறு இன்னல்கள் மத்தியில் உலகம் சிக்குண்டிருக்கும் இந்நிலையில் உலகின் படைப்புக்கள் அனைத்தையும் தனது சகோதரன் சகோதரியாக அன்பு செய்த புனித பிரான்சிஸ் அசிசியாரின் வார்த்தைகளை கொண்டு ஆரம்பிக்கும் சுற்றுமடலை, அவரது கல்லறையின் மேல் வைத்து ஒப்பமிட்டு, அவரது பெயர் கொண்ட திருநாளில் வெளியிடுவது பலரது கவனத்தையும் இச்சுற்றுமடலை நோக்கித் திருப்பியுள்ளது.

ஆதாரம் - வத்திக்கான் இணையம்

## சாம்பல்தீவு - திருச்சிலுவை ஆலய திருவிழா - 2020



சாம்பல்தீவு, திருச்சிலுவை ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா ஆவணி 18, 2020 வெள்ளிக்கிழமையன்று பங்குத்தந்தை அருட்பணி. இ. யூட் சர்வானந்தன் அடிகளின் தலைமையிலான கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி. 20.09.2020 அன்று மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை தலைமையிலான கூட்டுத்திருப்பலியுடன் இனிதே நிறைவுற்றது. பங்குத்தந்தை மற்றும் மக்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்.



## கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் புதிய துணை ஆயராக

## பேரருட்திரு அன்ரன் ரஞ்சித் ஆண்டகை






கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் புதிய துணை ஆயராக அதே மறைமாவட்டத்தின் குருவாகிய பேரருட்திரு அன்ரன் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் கடந்த ஆகஸ்ட் 29ம் திகதி கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையினால் திருநிலைப்படுத்தப்பட்டார். ஆண்டகை அவர்களின் புதிய பணிகள் சிறக்க திருமலை மறைமாவட்டத்தோடு இணைந்து திருமலைத்தீபம் வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றது.

## இறையிரக்கத் திருத்தல வின்சன் டீ பவுல் சபையின் வாழ்வாதார உதவிகள்






இறையிரக்கத் திருத்தல வின்சன் டீ பவுல் சபையினர் வாழ்வாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்கள் மற்றும் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களில் இருந்து சிலரை தெரிவு செய்து அவர்களுக்கான வாழ்வாதார உதவிகளை கட்டம் கட்டமாக செய்து வருகின்றனர். அதற்கமைவாக சென்ற மாதம் செல்வநாயகபுர பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு ஐம்பது கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன. இதற்கு நிதி உதவி வழங்கிய கனடா வாழ் அன்பருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## திருமண நல்வாழ்த்துக்கள்






19.09.2020

இறைவனின் பலியில் இறையாசீரோடு திருமண பந்தத்தில் இணைந்த திரு. திருமதி பரமானந்தன் சுபாஷினி தம்பதியினரை வாழ்நாளெல்லாம் இதே நெருக்கம், அன்பு, உறவு, மகிழ்ச்சி நீடித்து வாழ வாழ்த்துகிறோம்.

- குடும்ப உறவுகள்

## ஆண்டாங்குளம் - புனித அன்னை வேளாங்கண்ணி ஆலயத் திருவிழா - 2020



ஆவணித்திங்கள் 4ம் நாள் வெள்ளிக்கிழமை அன்று பங்குத்தந்தை அருட்பணி. டன்ஸ்டன் பிரட்ரிக் அடிகளின் தலைமையிலான கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய ஆண்டாங்குளம், புனித வேளாங்கண்ணி ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவின் நவநாட்கள் ஒன்பது நாட்கள் சிறப்பிக்கப்பட்டன. புதிதாக அபிஷேகம் செய்யப்பட்ட ஆலயத்தில் 13.09.2020 அன்று அருட்பணி. றொபின்சன் போல் அடிகளார் தலைமையில் திருவிழாக் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பங்கின் திருவிழா நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

## தொடர்புகளுக்கு ...

theepamlink@gmail.com
திருமலை தீபம்
திருமலை தீபம் Messenger
இல 297, டொக்கியாட் வீதி, திருகோணமலை
0262221022 / 026 2054362

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org